விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 07 வியாழக்கிழமை (23.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஐ.நாவின் பிரதிநிதிகள் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கக் கூடாது


## ஹெல உறுமய மீண்டும் கூச்சல்

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து கண்காணிக்க இலங்கைக்கு விஜயம் செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அரசாங்கத்தின் கூட்டணி கட்சியான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் பிரதேச சபை மீது கழிவொயில் வீச்சுத் தாக்குதல்

### ஆயுத முனையில் அரங்கேறியது அராஜகம்



வலி தெற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் (சுன்னாகம்) மீது நேற்று அதிகாலை இனந் தெரியாத நபர்களினால் கழிவொயில் வீசப்பட்டதோடு காவலாளிகள் இருவர் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயுத முனையில் நடந்தேறிய இந்தச் சம்பவம் அப்பகுதியில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (விரிவான செய்தி உள்ளே)

(ந-6)

## மகிந்தவின் குடும்பத்தினரால் சுதந்திரக்கட்சி சீரழிக்கப்படுகிறது

### சந்திரிகா குமாரதுங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது சீரழிக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினாலேயே இந்த சீரழிவு கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதி வேட் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள சாரதியின் கவனவீனம்; முதியவரின் கால்கள் போனது!



### பொலிஸார் அசமந்தம்; பொதுமக்கள் கொதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.-கொழும்பு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் தென்பகுதியினைச் சேர்ந்த சாரதியின் (சிங்களவர்) கவனவீனத்தால் முதியவர் ஒருவரின் இருகால்களும் நொருங்கியுள்ளன.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுமாலை 3 மணியளவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை ஓரம் கட்டுகிறதா ஐ.நா.?

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்படவிருந்த ஐந்தாவது பாதீட்டு குழுவிற்கான நியமனம் (20ஆம் பக்கம் பார்க்க)

## (உ/த) பரீட்சை விடைத்தாள்கள் அநீதியின்றி திருத்தப்படும்

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களின் திருத்தங்கள் கிடைக்கப் பெறாத மாணவர்களுக்கு அநீதிஏற்படாதவகையில்விடைத்தாள்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு போக்கு வரத்தில் ஈடுபடும் தனியார் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் விபத்துக் (20ஆம் பக்கம் பார்க்க)



## அகாஷி—பீரிஸ் சந்திப்பு

(கொழும்பு)

யப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின் போது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மக்களின் வாழ்வாதாரம் இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை

### ஐ.நா.பிரதிநிதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அடிப்படை தேவைகளான சுத்தமான நீர், உணவு, வீடு என்பனவற்றுடன் நீண்டகால பிரச்சினைகளான வழமை நிலைக்கு திரும்புதல், வாழ்வாதாரத்தை வளர்த்தெடுப்பதற்காக தொடர்ச்சியான உதவி ஆகியன இன்னும் பூர்த்தியாக நிலையில் வடக்கு மக்கள் இருப்பதாக ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

உலக மனிதாபிமான தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி சுபினே (20ஆம் பக்கம் பார்க்க)

## டெசோ தீர்மானங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்

### மன்மோகன் சிங் உறுதியளிப்பு

(புதுடில்லி)

அமெரிக்காவினால் மனிதவுரிமைகள் விடயத்தில் இலங்கை மீது கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இந்தியா எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததோ அதே போன்று டெசோ தீர்மானங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றில் நீதவானை நோக்கி மலக்கழிவை வீசிய கைதி!

## சிலாபம் நீதிமன்றில் பரபரப்புச் சம்பவம்

சிலாபம் மேல் நீதிமன்றத்திற்கு கைதியொருவரினால் மேற்கொள்ளப்பட்ட கழிவுத் தாக்குதல் காரணமாக நேற்று நீதிமன்ற நடவடிக்கைகள் பரபரப்பானநிலைமையைஎதிர்நோக்கியிருந்தன.

கடந்த 2006 ஆம் ஆண்டு தங்கொட்டுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட, பெண்ணொருவர் மீதான பாலியல் வன்முறை மேற்கொண்ட கைதியே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

அந்த கைதி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று இடம்பெறவிருந்தது. குறித்த கைதி சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டு திறந்த நீதிமன்றின் கைதிக் கூட்டில் நிறுத்தப்பட்டார்.

பின்னர் நீதிபதி தமது ஆசனத்தில் வந்தமர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க முற்பட்ட போது அந்த கைதி மறைத்து வைத்திருந்த கழிவு (மலம் உட்பட) பொருட்களை நீதிபதியை நோக்கி வீசியுள்ளார்.

இந்தச் சம்பவம் காரணமாக நீதிமன்றம் பரபரப்பான நிலைமையில் இருந்ததுடன், அதன் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தாக்குதலை மேற்கொண்ட கைதி உடனடியாக சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ந-8)

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க இரட்டைவேடம் போடுகிறது

## பாரதிய ஜனதா கட்சி சாடல்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு ஊன்று கோலாகவும் உறுதுணையாகவும் இருந்தது மத்தியில் ஆளும் காங்கிரஸ் – தி.மு.க கூட்டணி அரசுதான். தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை தடுக்கத் தவறுவதும் இதே அரசுதான். இலங்கை கடற்படையை கண்டித்து இதுவரை தி.மு.க காங்கிரஸ் கூட்டணி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாரதிய ஜனதா கட்சித் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்து பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக தி.மு.க அறிவித்திருந்தது. ஆனால் அந்தப் போராட்டத்தையும் தி.மு.க கைவிட்டுவிட்டது. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அரசியல் ஆதாயத் திற்காக தி.மு.க இரட்டை வேடம் போடுகிறது.

தி.மு.க நடத்திய டெசோ மாநாட்டின் நோக்கம் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக அல்ல. கருணாநிதி தன் மீதான களங்கத்தை துடைக்க நடத்திய நாடகம். தி.மு.கவின் இந்த இரட்டை வேடத்தை மக்கள் நன்றாக புரிந்து கொண்டார்கள் இவ்வாறு அவர் கூறினார். (ந-8)

# பல்கலைக்கழக பகிஷ்கரிப்பு அடுத்த வாரம் முடிபடையும்!

தற்போது நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு அடுத்தவாரம் முடிபடைவதற்கான சாத்தியம் உள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுடன் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையின் பின் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இப்பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் முன்வைத்த யோசனைகளை அமுல்படுத்துவதற்கான கட்டமைப்பொன்றை ஏற்படுத்தும்நடவடிக்கையை இருதரப்பும் ஆரம்பித்துள்ளதாகவும் அச்சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

எனினும் அடுத்த வாரம் பகிஷ்கரிப்பு நிறுத்தப்படும் என இப்போதே உறுதியாக கூற முடியாதென அவர் தெரிவித்ததுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து விபரிப்பதற்கு மறுப்புத் தெரிவித்தார். (ந-11)

# வவுனியாவில் எரிவாயு மயானம் 27ஆம் திகதி திறந்து வைக்கப்படும்

(பூந்தோட்டம்)

வவுனியா பூந்தோட்டம் எரிவாயு மூலம் உடல் தகனம் செய்யும் மயானம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாக நகர சபை உறுப்பினர் எஸ்.ரி. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

பல்வேறு நிதி உதவியுடன் 42 மில்லியன் ரூபாய் பெறுமதியில் கட்டப்பட்ட இக் கட்டடம் பல மாதங்களாக திறந்து வைப்பதில் காணப்பட்ட இழுபறி நிலையினால் திறந்து வைக்கப்படாது காணப்பட்டது. இந்நிலையில் 27ஆம் திகதி நகர சபைத் தலைவர் ஐ. கனகையா தலைமையில் இம் மயானம் திறந்து வைக்கப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-9,266)

# செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பிய கியூரியாசிட்டி விண்கலத்தில் காற்றுமானி சேதம்

(நியூயோர்க்)

மனிதர்கள் வாழ முடியுமா? என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் கியூரியாசிட்டி என்ற விண்கலத்தை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பி வைத்தது.

இந்த ஆய்வு கூட விண்கலம் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு செவ்வாய் கிரகத்தில் காலே கிரேடர் என்ற எரிமலை பகுதியில் பத்திரமாக தரை இறங்கியது. அங்கு பாறைகள், மலைகள் உள்ளிட்ட பகுதிகளை படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது.

ஆய்வு மேற்கொள்ள கியூரியாசிட்டி விண்கலத்தில் 10 விதமான அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் விண்ட் சென்சார் என்றழைக்கப்படும் காற்று மானி கருவியும் உள்ளது.

செவ்வாய் கிரகத்தில் வீசும் காற்றின் அளவை கண்டறிய பொருத்தப்பட்ட அந்த கருவி சேதம் அடைந்துவிட்டது. இந்த தகவலை கியூரியாசிட்டி விண்கலத்தை கண்காணித்துவரும் குழு தலைவர் ஜாவியர் கோமெஷ் எல் விரா தெரிவித்துள்ளார்.

கியூரியாசிட்டி விண்கலம் தரை இறங்கும் போது அதிர்வினால் உடைந்து சிதறிய பாறைகள் மோதியதால் அதன் வயர்களின் இணைப்பு துண்டிக்கப்பட்டு சேதம் அடைந்திருக்கலாம். அதனால் மிகப்பெரிய பாதிப்பு இல்லை. அதை சரி செய்துவிடலாம். அதற்கான சோதனைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

காற்று மானி தவிர தட்பவெப்ப நிலை அறியும் கருவி உட்பட மற்ற அனைத்து உபகரணங்களும் முழுமையாக செயல்படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# ஈழம்; பிரபாகரனின் கண்டுபிடிப்பு அல்ல

## அது பண்டைய முகவரி!

கருணாநிதி நடத்திய மாநாட்டில் வேண்டுமானால் ஈழம் என்ற சொல்லைத் தடை செய்யலாம். ஆனால் கல்வெட்டுகளில் இருப்பதை எந்த உத்தரவுகளால் என்ன செய்ய முடியும்?

அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு கி.மு.3-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வணிகம் செய்ய வந்தவர்களுக்கு மண்டபம் அமைத்துக் கொடுத்த செய்தியைச் சொல்கிறது அந்தக் கல்வெட்டு. தமிழ் வணிகரை தமேட என்றும் ஈழத்தில் இருந்தவரை ஈழ என்றும் அதில் குறிப்பு உள்ளது.

சிங்களவரின் வேதப் புத்தகமாகச் சொல்லப்படும் மகாவம்சம் என்ற நூலில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மன்னன் பெயர் ஈழ நாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜவலிய் என்ற சிங்கள நூலில் இம்மன்னன் பெயரை எலுன்நாக என்று கூறியுள்ளார்கள். ஈழ என்பதும் எலு என்பதும் ஒன்றிலிருந்து ஒன்று மருவிய சொற்கள்.

எனவே ஈழம் என்பது பிரபாகரனின் கண்டுபிடிப்பு அல்ல. பண்டைய முகவரி

தனித் தமிழ்நாடு விடுதலைப் படை என்று யாராவது உருவாக்கினால் அதைத் தடுக்கும் ஒரே நோக்கத்துக்காக இனி தமிழ்நாடு என்ற சொல்லையே பயன்படுத்தக்கூடாது என்று தடை விதித்தால் எவ்வளவு அபத்தமோ அத்தனை அபத்தம் இது.

ஜூனியர் விகடன் இவ்வார இதழில் வெளியான கழுகார் பதில்கள் பகுதியில் வாசகர் ஒருவர் தொடுத்த ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தக்கூடாதா? என்ற வினாவுக்கு மேற்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டுள்ளது. (ந-8)

# காணிச்சட்டம் திருத்தப்படும் அகாஷியிடம் ஹக்கீம் தெரிவிப்பு

முப்பது வருட மோதல் காலம் கருத்திற் கொள்ளப்படாத வகையில் நாட்டின் காணிச் சட்டம் திருத்தப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று கூறினார். சட்டத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக அரசாங்கம் மக்களை குடியமர்த்துவதில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி பேசும் போது அவர் கூறினார்.

இடம்பெயர்ந்தவர்கள் அவர்களின் காணிகளில் மீளகுடியேற அரசாங்கம் வசதி செய்து கொடுக்கும் போது அக்காணிகளில் வேறு ஆட்கள் யுத்தகாலத்தில் குடியேறி பத்து வருடங்களுக்கு மேல் வசித்து வருவதை காணமுடிகின்றது. எனவே நாம் யுத்தகாலத்தை கணக்கில் எடுக்காமல் விடும் வகையில் நாம் காணிச்சட்டத்தை திருத்தவுள்ளோம் என அமைச்சர் கூறினார்.

நீதிமன்றங்களில் மட்டும் தங்கியிராமல் காணித் தகராறுகளை சமாதானமாக தீர்த்து வைக்கவென இச் செயன்முறைகளும் பயன்படுத்தப்படும் என அவர் மேலும் கூறினார்.

மக்களை மீளக்குடியமர்த்தும் செயன்முறை ஏற்புடைய கதியில் நடைபெறுவதாக ஜப்பானிய விசேட தூதுவர் கூறினார். (ந-11)

# வைத்தியர் யமுனானந்தா விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி எஸ். யமுனானந்தா விபத்தில் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பரந்தன் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்றுடன் வைத்தியர் சென்ற கார் மோதியதனாலேயே குறித்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ந-4)





முதலாம் ஆண்டு நினைவலைகளில்...

தோற்றம் 18 . 12 . 1948



மறைவு 04 . 09 . 2011

அமரர் K. S. துரைரத்தினம் (சாந்தன்)

பிரபல சமூகசேவையாளனும் எமது ஆளுநர் சபை உறுப்பினரும்
செஞ்சிலுவைச் சங்கச் சேவையாளனுமாகிய
அமரர் K.S. துரைரத்தினத்திற்கு (சாந்தன்)
இன்று முதலாமாண்டு நிறைவு தினம்

இலங்கைச் செஞ்சிலுவை சங்கம்
யாழ் கிளை

'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம் (227)
புதிய வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212 711

தவறிவிட்டது

மானிப்பாய் வீதி, இணுவில் மேற்கு, இணுவில் எனும் முகவரியினையுடைய நித்தியானந்தன் சிவஞானரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (903371480V) கொடிகாமத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும். (264)

தொடர்பு: 0775925309


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அன்பும் ஆணவமும்

ஒரு ஊரிலே பெரிய மா மரமொன்று கம்பீரமாக செழித்து நின்றது.

அதிலே அதிகளவு பூக்கள்... கனிகள்... பறவைகள்... என காணப்படும்.

ஒரு சிறுவன் அந்த மரத்தடியிலே வந்து விளையாடுவது வழக்கம். அந்த மரத்திற்கு அந்தப் பையன் மீது ஒரு தனிப்பட்ட பாசம் பிறந்தது.

சிறுவனோ அந்த மரத்தில் இருந்த பூக்களை; பழுங்களைப் பறிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அதற்காகவே அந்த மரம் தன்னுடைய கிளைகளை வளைத்து அவனுக்கு எட்டும் அளவிற்கு தலை சாய்த்தது.

சிறுவன் பூக்களைப் பறித்தான். மரம் சந்தோஷப்பட்டது.

மரம் அன்பின் அடையாளம்... அதனாலே அது கொடுப்பதிலே சந்தோசப்பட்டது. மனிதன் ஆணவத்தின் அடையாளம். அதனாலே இவன் பறிப்பதிலேயே சந்தோசப்பட்டான்.

சிறுவன் வளர்ந்து பெரியவனானான். அந்த மரத்தின் மடியிலே படுத்து உறங்கினான். பழுங்களைப் பறித்துச் சாப்பிட்டான். இவையெல்லாம் அந்த மரத்திற்கு சந்தோசத்தை அளித்தது.

நாட்கள் செல்ல சிறுவன் அந்த மரத்தின் கிளையிலே உட்கார்ந்து ஊஞ்சலாட ஆரம்பித்தான்.

அவனுக்கு சந்தோசத்தைக் கொடுப்பதில் இந்த மரத்திற்கு ஆனந்தம். மரத்திற்கு அசௌகரியத்தைக் கொடுப்பதில் அவனுக்கு ஆனந்தம். இது அன்பிற்கும் ஆணவத்திற்கும் உள்ள வித்தியாசம்.

நாட்கள் நகர அவனுக்கு கடமை, இலட்சியம் அனைத்தும் வந்து சேர்ந்தது. படித்து பரீட்சை எழுதி சித்தியடைய வேண்டியிருந்தது.

இதனால் மரத்தடிக்கு அவனது வருகை குறைந்தது.

ஆனால், மரம் இவனுக்காக காத்துக்கிடந்தது. இவன் உலக விடயங்களில் மூழ்கிப் போனான். தற்செயலாக ஒருநாள் அந்தப் பக்கமாகப் போனான்.

மரம் அவனைப் பார்த்துக் கேட்டது; "மறந்து விட்டாயா என்னை? நான் உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஆவலாகக் காத்துக் கொண்டு இருக்கிறேன்"என்றது.

இவன் பார்த்துச் சொன்னான்; "நீ என்ன வைத்திருக்கிறாய். நான் உன்னிடம் ஏன் வர வேண்டும்? உன்னிடம் பணம் இருக்கிறதா... சொல்லு வாறேன்... ஏனென்றால் நான் இப்போது பணத்தைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்"என்றான்.

"உனக்குப் பணம் தானே வேண்டும். என்னுடைய பழுங்களைப் பறித்துக்கொள். அதை விற்பனை செய்து பணம் சம்பாதித்துக் கொள்" என்று மரம் கூறியது.

உடனே சற்றும் தாமதப்படாமல் மரத்திலே ஏறினான். பழுங்களைப் பறித்தான். பழுக்காத காய்களையும் பறித்துக்கொண்டான். தனது கிளை கொம்புகள் உடைந்து விட்டால் கூட மரம் கவலைப் படுவதில்லை. சந்தோசப்படும்.

இவன் பழுங்கள் அனைத்தையும் பொறுக்கி விட்டு "நன்றி" எதுவுமே தெரிவிக்காமல் தனது பயணத்தை ஆரம்பித்தான்.

அதன்பின் அந்தப் பக்கமே வரவில்லை. பணம் சம்பாதிப்பதிலே குறியாக இருந்தான். மரத்திற்கு மறுபடியும் வருத்தம். "அவன் வருகை இல்லை"என்று.

பல வருடங்கள் கழிந்தன. ஒருநாள் அவன் அந்த வழியாக வந்தான்.

"வா மகனே... என்னை வந்து கட்டிப்பிடித்துக் கொள்"என்றது மரம்.

"நான் என்ன இன்னும் சிறிய வயதிலா இருக்கிறேன்–உன்னை கட்டித் தழுவுவதற்கு"என்று அவன் கூறினான்.

"நான் இப்போது ஒரு வீடு கட்டப்போகிறேன். அதற்கு உன்னால் உதவ முடியுமா?" என்றான்.

"எனது கிளைகளை வெட்டிக்கொள்"என்றது. அவன் சிறிது நேரத்தினுள் அனைத்தையும் மொட்டை அடித்து விட்டான்.

மறுபடியும் சற்று நாட்கள் சென்ற பின்னர் அந்த மனிதன் வயதாகிக் கிழவனாக அவ்வழியாக வந்தான்.

"நான் தூரதேசம் சென்று பணம் சம்பாதிக்க திட்டமிட்டுள்ளேன். நான் பயணம் செய்ய ஒரு படகு தேவையாகவுள்ளது. அதற்கு நீ உதவ வேண்டும்"என்று கூறினான்.

"அது பெரிய பிரச்சினை இல்லை... என் அடி மரத்தை வெட்டிக்கொள்"என்றது மரம்.

அவன் வெட்டினான்... படகு செய்தான்... போய் விட்டான் இனிமேல் திரும்பி வருவானோ? வரமாட்டானோ என்பது சந்தேகம். ஆனால், இந்த அடிமரம் அவனுக்காகக் காத்துக்கிடந்தது.

ஏனென்றால்... இது அன்பின் அடையாளம்... அவன் ஆணவத்தின் அடையாளம்.

அன்பு கொடுப்பதற்குத்தான் ஆசைப்படும். ஆணவம் வாங்குவதற்குத்தான் ஆசைப்படும்.

இப்படியாக ஓஷோ கதை ஒன்றைக் கூறியுள்ளார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதால் விடுதி மாணவர்கள் நேற்று அவதி!

## யாழ்.பல்கலையிலும் மாணவர்கள் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள மாணவர்களையும் விடுதியினை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ் வெளியேற்ற நடவடிக்கை யாழில் உள்ள பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்களிலுமே மேற்கொள்ளப்படுகிறது.

நாட்டின் அனைத்து பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் அனைவரும் பல கோரிக்கைகளை முன் வைத்து பணிப் பகிஷ்கரிப்பில் 3 மாத காலத்திற்கும் மேலாக மேற்கொண்டு வந்ததோடு இடையிடையே அரசுக்கெதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.

எனினும் இப்போராட்டங்களினாலும் உரிய தீர்வினை பெறமுடியாமல் போகவே தாம் பணிப்பகிஷ்கரிப்பு காலவரையறையற்ற ரீதியில் தொடரும் என அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து குறித்த பணிப் பகிஷ்கரிப்புக்களை கைவிடுமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடமும் கல்வி சாரா ஊழியர்களிடமும் கல்வியமைச்சு கேட்டுக் கொண்டது.

எனினும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் நாம் பணிப் பகிஷ்கரிப்பினை கைவிடப் போவதில்லை என ஆசிரியர் சங்கம் அறிவித்திருந்தது.

இவ் அறிவிப்பினையடுத்து கல்வி அமைச்சின் அதிரடி அறிவிப்பாக விரிவுரையாளர்கள் பணிக்குச் செல்லாவிட்டால் அனைத்து பல்கலைக்கழகங்களும் இழுத்து மூடப்படும் என அறிவித்திருந்தது.

இவ் அறிவிப்பின் செயல் வடிவமாக நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களும் நேற்றைய தினம் இழுத்து மூடப்பட்டன.

பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்பட்டதன் பின்னர் அங்குள்ள விடுதிகளிலும் மாணவர்கள் தங்குவதனை அனுமதிக்க முடியாதென்றும் அனைத்து மாணவர்களையும் விடுதிகளிலிருந்து வெளியேற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக்கு கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இவ் அறிவிப்பினையடுத்து பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

இவ் அறிவிப்பு யாழ். பல்கலைக்கழகத்திலும் விடுக்கப்பட்டதனால் மாணவர்கள் நேற்றையதினம் செய்வதறியாது நின்றுள்ளனர்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலையில் சிங்கள மாணவர்களும் இருப்பதனால் அவர்களும் பெரும் சிரமத்தினை எதிர் நோக்கியிருந்தனர்.

இதைவிட வெளி இடங்களில் தங்கியுள்ள மாணவர்களும் பல்கலைக்கழக விரிவுரைகள் இன்றி வீணே பணம் செலுத்த வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். (ரு-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 100 |
| தக்காளி | 50 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 50 | 70 |
| கரட் | 120 | 100 | 160 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | -- |
| பயற்றங்காய் | 40 | 80 | 40 |
| லீக்ஸ் | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 110 | 120 | 80 |
| போஞ்சி | 110 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | -- |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 80 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 20 | 20-22 |

## இராசி பலன்

*23.08.2012*
*(ஆவணி 07, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*சஷ்டி பிற்பகல் 12.20 மணிவரை*
*சுவாதி பிற்பகல் 3.31 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-9.05 மணிவரை*
*சஷ்டி விரதம்,*
*அமிர்த சித்தம்.*

**மேடம்** அபூர்வ சந்திப்புக்கள் இடம்பெறலாம், பயணங்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையலாம், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கான நாள்.

**இடபம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் சம்பந்தப்பட்ட வகையில் முக்கிய முடிவெடுப்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** பிள்ளைகளுக்காக சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும், மாமன், மைத்துனர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், புண்ணிய, கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**சிங்கம்** நண்பர்களிடம் ஒப்படைத்த வேலைகளை நல்ல விதமாக ஒப்படைப்பர், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், வெற்றிகள் குவிய விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி** திடீர் பண வரவு மனதிற்கு சந்தோஷம் தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், மக்கள் போற்றும் வாழ்வமைய விக்னேஸ்வரனை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலன் கிடைக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், சற்று அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**தனுசு** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எண்ணங்கள் நிறைவேற ஏக தந்தனை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**மகரம்** கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தந்தை வழி உறவுகளால் நன்மையுண்டு.

**கும்பம்** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், மாலை நேரம் பிரிய மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.


**மீனம்** வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், வரவை விட செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் வருத்தமடையும் சூழ்நிலை உருவாகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பிரதேசசபையின் மீது விசமிகளால் கழிவு ஓயில் வீச்சு!

## ஆயுதமுனையில் அதிகாலை வேளை சம்பவம்



(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட வலி. தெற்கு பிரதேச சபையின் (சுன்னாகம்) தலைமைக் காரியாலயம் மீது விசமிகளினால் கழிவு ஒயில் வீசப்பட்டதோடு அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு காவலாளிகள் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டு அடித்து காயப்படுத்தப்பட்ட நிலையில் பற்றைக்குள் தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.55 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்தார்.

அத்தோடு இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தக் காரியாலயத்தில் இன்று (நேற்று) தொடக்கம் எமது சபைப் பணிகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டிருந்ததோடு சுவாமிப்படம் வைத்து பால் காய்ச்சுவது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கழிவு ஒயில் வீச்சு இடம் பெற்றுள்ளது. இருப்பினும் நாம் எடுத்த தீர்மானத்தின்படி அலுவலகப்பணிகளை சம்பிரதாய பூர்வமாக இன்றே (நேற்று) ஆரம்பிக்கின்றோம்.

ஆனால், கட்டடம் மீது வீசப்பட்ட கழிவு ஒயிலை எக்காரணம் கொண்டும் அகற்ற மாட்டோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் என்னவெல்லாம் நடந்தது என்பதற்கு இதுவும் ஒரு சாட்சியாக அமையும்.

இங்கு வரும் மக்களும் இதனைப் பார்த்து உணர்ந்து கொள்ளட்டும் என்று அவர் காட்டமாக தெரிவித்தார். இதேவேளை, 15 இற்கும் மேற்பட்ட இனம் தெரியாத நபர்கள் ஹயஸ் வாகனங்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் வந்ததாகவும் துப்பாக்கியை காட்டி காட்டி எம்மை சுட்டு விடுவோம் என எச்சரித்ததோடு கை, கால், கண் என்பவற்றை கட்டி பிரதேச சபை கட்டடத்திற்கு பின்புறமாகவுள்ள பற்றைக்குள் தூக்கி வீசியதாக காவலாளிகள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த காவலாளிகளான செல்வராசா, பளிங்கன் ஆகிய இருவருக்கும் உடலில் காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பிரதேச சபையின் தலைமைக் காரியாலய கட்டட நிர்மாணப்பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

சுமார் 6.8 கோடி ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

# கடல் வான் ஆழமாக்கல் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 14 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க கடல்வான் ஆழமாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சம்மேளனத்திற்குட்பட்ட சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களின் வேண்டுகோளுக்கு இணங்க கடல் வான் ஆழமாக்கும் வேலைகளை மாரிகாலம் நெருங்குவதனால் கூடிய விரைவாக செய்து தருமாறு அமைச்சர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மக்கள் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்மேளனத்தினால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் தும்பளை கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், சக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தொண்டைமானாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கெருடாவில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டித்துறை (வலிகாமம் வடக்கு சமாசம்) கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வேண்டுகோளின்படி கடல் வான் ஆழமாக்கும் முன்னுரிமைப் பட்டியலுடன் வரைபடமும் கைளிக்கப்பட்டு ள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# புதுப்பிக்க வீதி இருக்கு; புனரமைக்க நிதி இருக்கு

## இனியும் தாமதிப்பது ஏன்?–மக்கள்

மிருசுவில் வைத்தியசாலை ஊடாக கெற்பெலி சிவன் கோவிலை சென்றடையும் வீதி, தவசிக்குளம் பொதுக்கிணற்றடி ஊடாக கஜேனி பிள்ளையார் கோவிலடியை சென்றடையும் வீதி ஆகிய வீதிகளை புனரமைத்து தருமாறு உரியவர்களிடம் அப்பகுதி மக்களால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட உரிய தரப்பினர் வீதியை புனரமைத்து தருவதாக எழுத்து மூலம் தெரிவித்ததுடன் கொடிகாமம் பிரதேச சபைத் தவிசாளரிடம் அவ்வீதியைப் புனரமைக்குமாறு கோரினர்.

இதை அடுத்து மேற்குறித்த வீதிகளில் ஒரு வீதியான மிருசுவில் வைத்தியசாலை ஊடாக கெற்பெலி சிவன்கோவிலை சென்றடையும் வீதி புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்நிதியானது போதாமல் உள்ளது. எனவே, மக்களின் பங்களிப்பும் தேவை என்பதை சபைத் தவிசாளர் தெரிவித்ததை அடுத்து இதற்கான கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

இது தொடர்பாக இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட செயலாளர் தா.பேரின்பசிவம் தெரிவிக்கையில்,

மக்களின் நிதிப் பங்களிப்பும் இவ்வீதி புனரமைப்பதற்கு தேவையென தவிசாளரால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மக்கள் தமது பங்களிப்பை வழங்குவதாக தெரிவித்தனர்.

ஆனால், இக்கூட்டம் நடைபெற்று 2 மாதங்கள் ஆகியும் புனரமைப்பதற்கான எந்த வித செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபை உறுப்பினர்களிடமும் இதுவரை தொடர்பு எதுவும் ஏற்படுத்தவில்லை என மேலும் அவர் தெரிவித்தார்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு மேற்குறித்த வீதியை புனரமைத்து தருவதற்கான ஏற்பாடுகளை துரித கதியில் மேற்கொள்ளுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3)




# சிற்பனை முருகன் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# மழைக்கு முன்னதாக வீதியை புனரமையுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

ஏ9 வீதியில் கொடிகாமத்தில் இருந்து கோயிலாமனை ஊடாக மந்துவில் கிழக்கிற்கு செல்லும் பிரதான வீதியை உடன் புனரமைக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மந்துவில் இயற்றாலை, தாவளை, காரைக்காடு போன்ற பிரதேசங்களுக்கு செல்வதற்கு குறுகிய தூரத்தை உடைய இவ் வீதியையே நூற்றுக்கணக்கான மாணவர்கள், விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கூடுதலாக பயன்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனரக வாகனங்களின் பாவனை இவ் வீதியில் கூடுதலாக இருப்பதால் ஏற்கனவே சேதமடைந்துள்ள இவ் வீதியில் கற்கள் மேலும் கிளறப்பட்டு பரவிக் காணப்படுகிறது. மழை காலம் அண்மிக்க இருப்பதால் குன்றும் குழியுமாக உள்ள இவ்வீதியில் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

எனவே, மழைகாலத்திற்கு முன்பதாக இவ்வீதியைப் புனரமைத்து உதவுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-3-29)

# பரிசளிப்பு விழாவும் பேச்சு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)


கரவெட்டி ரவீன்ஸ் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நிறுவனத்தின் தரம் 11 மாணவர்கள் பங்குகொள்ளும் முன்னாயத்தமில்லாமப் பேச்சும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.சிறிகுகநேசன், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி நடா ரஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக்கு வந்த சிங்கள அரசு முழுவதும் தமிழரை அடக்கி ஆளவே நினைத்தது

## சர்வதேச சமூகம் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்-கஜேந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் தமிழ்த்தேசத்தை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு சிங்கள பௌத்த மயமாக்கலில் அதிக அக்கறையுடன் செயற்பட்டது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, தமிழ்த் தேசத்தை அங்கீகரிப்பதன் ஊடாகவே தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதை சர்வதேச நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாடுகள் இலங்கையில் வாழும் தமிழர்கள் தொடர்பில் அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முனைப்புக் காட்டி வருகிறது. ஆனாலும் தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்காத வரையில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வது கடினமானதாகவே இருக்கும்.

அத்தோடு சர்வதேச நாடுகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் சிங்கள பௌத்த மயமாக்கலை நோக்கமாக கொண்டிருந்தன.

தமிழ் தேசத்தை இலங்கையிலிருந்து முற்றாக அழிப்பதே அவற்றின் கொள்கை. கடந்த 60 வருடங்களாக சிங்கள தேசிய வாதமே இலங்கையில் அரச இயந்திரத்தை இயக்கி வருகிறது.

ஆயதப் போராட்டத்தை ஒடுக்க சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு துணை போனது. இதில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் பெரும் பங்குண்டு. இதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆனால், அமெரிக்கா தலைமையில் ஐ.நா.மனிதவுரிமை கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பிரேரணைக்கு இந்தியாவும் ஆதரவு வழங்கியது என்பதும் உண்மை.

எனவே, தமிழ் தேசத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிப்பதன் ஊடாகவே தமிழர்கள் தமது உரிமைக்காக போராட முடியும். உரிமைகளைப் பெறவும் முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# சிரார்த்ததினமும் மடல் வெளியீடும்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி அமரத்துவமடைந்த அமரர் திருமதி வி.ஆர்.ஏ. ஒஸ்வேல்ட்டின் ஓராண்டு சிராா்த்ததினமும் செய்தி மடல் வெளியீடும் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனயில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்டன் சோமராஜா தலைமையில் நடைபெறும். (ந-9-266)

# கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைக்க நிதியுதவி

## செஞ்சிலுவைச் சங்க அனுசரணையில் ஏற்பாடு

(நல்லூர்)

செஞ்சிலுவைச்சங்க சர்வதேச செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தினால் இலங்கை செஞ்சிலுவைச்சங்க அனுசரணையுடன் வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வளலாய் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 45 குடும்பங்களுக்கு புதிய மலசலகூடம் அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி கிராமத்திற்கு கடந்த வாரம் செம்பிறை சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையின் தலைவர், உப தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவின் தலைவர், வளலாய் கிராம சேவையாளர், கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் அடங்கிய குழு அவ்விடங்களை பார்வையிட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடம் அமைக்க 88 ஆயிரம் ரூபா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொடுப்பனவுகள் வேலைக்கேற்றவாறு பகுதி பகுதியாக வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விபரங்களை கிராம சேவையாளரின் பெயர்ப் பலகையில் விளம்பரப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தகுதியற்றவர்களுக்கு மலசலகூடம் வழங்குவதற்கு பெயர் விபரங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையிடுமாறும் அறிவித்துள்ளனர். (அ-3-134)

# டெங்கு ஒழிப்பு திட்டத்தால் ஆறு மாத கழிவுப் பொருட்கள் தற்போது அகற்றப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் கடந்த ஆறுமாதங்களாக வீதியில் வைக்கப்பட்டிருந்த கழிவுப் பொருட்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைத் திட்டத்தின் கீழேயே இக்கழிவுப் பொருட்கள் அப்புறப் படுத்தப்பட்டுள்ளன.

மந்துவில், மீசாலை வடக்கு, இராமாவில் ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர், கொடிகாமம் பொலிஸார் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை வீடு தோறும் நடத்தி வருகின்றனர். (ந-3-29)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை அரியாலை, புங்கங்குள வீதி, அரியாலை சன சமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை அரியாலை, கண்டி வீதி, தியாகராஜா படிப்பகத்திலும் வைத்து வழங் கப்படும்.

மறுநாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரைஅரியாலை, கண்டி வீதி, சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை ஏ வி வீதி மிருக வைத்திய நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (ந-9)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

**The Only Official French Language Center in Jaffna**

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வ முள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்:- சனி,ஞாயிறுகளில்

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61,Kachcheri-Nallur Road ,Jaffna T.P: 021 2228093

E.mail:alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம் (261)



**கல்யாண மாலை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி<br>உயரம்:-5'3"<br>கி.பா:-17<br>தொழில்:- U.K,BBA, MSc<br>B/281 | பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை<br>உயரம்: 5'4"<br>கி.பா:-47.75, 7 இல் செவ்<br>தொழில்:-B.A. நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (சைவ போசனம் உடையவர்)<br>G/152 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மிருகசீரிடம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-2<br>தொழில்:-பிரான்ஸ்<br>B/121 | பிறப்பு:- 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுஷம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:-36, 2 இல் செவ்<br>தொழில்:- BSc ஆசிரியை (விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)<br>G/352 |
| பிறப்பு:-1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 3<br>உயரம்:-5'9"<br>கி.பா:-21.5<br>தொழில்:-எலக்ரோனிக் இன்ஜினியர் (U.K)<br>/B/328 | பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 3<br>உயரம்: 5'5.5"<br>கி.பா:- 59.25, 8 இல் செவ்<br>தொழில்:-EXECUTIVE SECRETARIAT (சைவ போசனம்)<br>G/153 |
| பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-29.5, 2 இல் செவ்<br>தொழில்:-சொந்த வியாபாரம்<br>B/273 | பிறப்பு:- 1968 றோ.க.<br>தொழில்:-ஆசிரியை<br>எதிர்பார்ப்பு:- ஜாதகமும் பார்ப்பதில்லை, ஜாதகமுமில்லை, விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம்.<br>G/353 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை வெற்றி கொண்ட அரசு ஊடகப் போரில் தோல்வியடைந்துள்ளது

## பேராசிரியர் றொஹான் சுட்டிக்காட்டு

ஊடகப் போரில் அரசாங்கம் தோல்வியை தழுவியுள்ளதாக பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பேராசிரியர் றொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற மோதல்களில் அரசாங்கம் வெற்றியீட்டிய போதிலும் ஊடக யுத்தத்தில் தோல்வியை தழுவியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் ஆதரவினை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் தி.மு.க. தலைவர் கருணாநிதி டெசோ மாநாட்டை நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் பலவீனமடையும் சந்தர்ப்பங்களில் இவ்வாறு இன அல்லது மத ஆயுதத்தை பயன்படுத்தி மக்களின் ஆதரவை திரட்ட முனைப்பு காட்டுவது இயல்பான நிலைமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் வாழும் தமிழர்கள் புலி உறுப்பினர்களுடன் தொடர்புகளை பேண விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தமிழீழத்தை அமைக்கும் நோக்கில் ஒரு சிலர் மட்டும் முயற்சி செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

எம்.ஜி.ராமச்சந்திரன் மற்றும் கருணாநிதி போன்றோரே இலங்கையில் பயங்கரவாதத்தை விதைத்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் வலுவான சிறந்த ஆற்றல் மிக்க ஒருவரை தமிழகத்திற்கான தூதுவராக நியமிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழகத்துடனும் இந்தியாவுடனும் சிறந்த உறவு பேணப்பட்டதாகவும் இதேபோன்றதொரு உறவு மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களுடன் உறவுகளை பேணுவதற்காக வெளிவிவகார அமைச்சு தனிப்பிரிவு ஒன்றை உருவாக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

லண்டனுக்கோ வோஷிங்டனுக்கோ சிறந்த இராஜதந்திரிகளை அனுப்புவதனை விடவும் சென்னைக்கு சிறந்த தூதுவரை அனுப்பி வைப்பது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை தடுக்க பொலிஸாரும் ஏனைய படையினரும் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற போதிலும் புலிகளின் போலிப் பிரசாரங்கள் மற்றும் பிழையான தகவல் வெளியீட்டை தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட நாட்டின் முக்கியஸ்தர்கள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளும் போது ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் புலிகளுக்கு எதிரான ஊடகப் போரில் தோல்வியடைந்துள்ள நிலைமையே இவ்வாறான போராட்டங்களுக்கு பிரதான ஏதுவென றொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார். (ந-2)

## 34 ஆவது ஆண்டு நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 34 ஆவது ஆண்டு நினைவுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இசைப்பாடல்கள், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ந-9)

## கோதுமைமாவின் விலையை தேவையேற்படின் கூட்டுவோம்

### உள்ளூர் விவசாயிகளை பாதுகாக்கவாம்-வர்த்தக அமைச்சர்

இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்ளூரில் தயார் செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மா மீது சகல வரிகளும் அடங்கலாக 30 ரூபா அறவிடப்படுகின்றது. உள்ளூர் விவசாயிகளை பாதுகாப்பதற்காக தேவையேற்படின் கோதுமை மாவின் விலையை கூட்டுவோம் என்று கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஐ.தே.க. எம்.பியான ரவி கருணாநாயக்க கோதுமை மாவின் நுகர்வு அதன் தலா வீத நுகர்வு அறவிடப்படும் நேரடி மற்றும் மறைமுக வரிகள் உள்ளிட்ட கேள்விகளை கேட்டிருந்தார். கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் நாடு அரிசியில் தன்னிறைவு அடைந்துள்ளது.

கோதுமைமாவின் பாவனையை நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்க வேண்டும். கோதுமை மாவிற்கு நேரடி மற்றும் மறைமுக வரியாக 30 ரூபா அறவிடப்படுகின்றது. தேசிய விவசாயிகளை பாதுகாப்பதற்காக கோதுமை மாவின் விலையை கூட்டுவதானால் கூட்டுவோம்.

அதன் மூலமாக உள்ளூர் விவசாயிகளுக்கு விலையை நிர்ணயித்துக்கொள்ள முடியும் என்பதுடன் கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் நாமே வெற்றியீட்டுவோம்.

தேர்தலை நோக்காகக் கொண்டு பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை என்றார். இதன் போது குறுக்கிட்ட ரவி கருணாநாயக்க எம்.பி. வெள்ளையர்களின் கோதுமை மா வேண்டாம் எனின் அதனை தடை செய்யவும் என்றார். (ந-2)


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை இடமாற்றம்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை நேற்று தொடக்கம் புதிய அலுவலக கட்டிட தொகுதியில் இயங்குவதாக சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

இதுவரை காலமும் மன்னார் வீதி நெளுக்குளத்தில் இயங்கி வந்த இவ்வலுவலகம் கடந்த 17 அம் திகதி நேரியகுளம் வீதி நெளுக்குளத்தில் திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதியில் இயங்கவுள்ளதாகவும் பொதுமக்கள் தமது அலுவலக கடமையின் நிமிர்த்தம் நேரியகுளம் வீதி நெளுக்குளத்தில் அமைந்துள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளதாகவும் சபையின் தலைவர் தெரிவித்தார். (ந-9-266)

### தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று மஞ்சம்



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகின்றது. இதில் 6 ஆம் திருவிழாவாகிய இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

## நகைகளை அடகு வைத்துத்தான் மக்களின் வாழ்வு நகர்கிறது

### ஐ.தே.க. எம்.பி. விசனம்

மக்கள் பெருமளவில் நகைகளை அடகு வைத்தே வாழ்ந்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கருஜய சூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இவ்வாறு அதிகளவில் மக்கள் ஆபரணங்களை அடகு வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பொருளாதார சுமைகள் காரணமாகவும் திருடர் பயத்தினாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளது. சில வங்கிகளில் ஆபரணங்களை பாதுகாப்பு பெட்டகங்களில் பாதுகாப்பாக வைப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அதிகளவான ஆபரணங்கள் அடகு வைக்கப்படுவதனால் அனைத்தையும் பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பொது மக்கள் பணத்தை பாரியளவில் விரயம் செய்து வருவதாகவும் இது மிகவும் வேதனைக்குரிய விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் உயர் அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிதிமோசடிகள் தொடர்பில் 4 ஆயிரத்து 14 முறைப்பாடுகள் குறித்த அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் ஒப்படைக்கப்பட்ட அறிக்கைகளை போன்றே இந்த அறிக்கையிலும் எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-2)

## இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது! கோத்தா மீண்டும் உறுதி

(கொழும்பு)

வடக்கில் இருந்து இராணுவ படை முகாம்கள் அகற்றப்படமாட்டாது என்று பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க அனைத்துலக கற்கைகள் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். புலிகளுக்கு சார்பான சக்திகள் மீண்டும் நாட்டின் சமாதானத்தை சீர்குலைக்கும் வாய்ப்புக்கள் இல்லை எனினும் இலங்கை அரசாங்கம் போர் முடிவுக்கு வந்த பின்னர் பல சவால்களை எதிர்கொண்டது.

எல்லா சவால்களையும் எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் முக்கியமான பங்காற்றியுள்ளனர். வடக்கில் பாதுகாப்பை பொலிஸார் உறுதிசெய்கின்றனர். அதே வேளை இராணுவ முகாம்கள் பாதுகாப்பு தேவைகளுக்காக அங்கு தொடர்ந்து பேணப்படும்.

அவை ஒருபோதும் அகற்றப்படமாட்டாது. வடக்கில் இராணுவ முகாம்களை அமைக்கும் பணி இப்போது மேற்கொள்ளப்பட்டதல்ல. கடந்த 1950 களிலேயே அங்கு இராணுவ முகாம்களை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ந-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும்

## அது அவசியமும் கூட – சரத்

(கொழும்பு)

புதிய அரசியல் கலாசாரமொன்று உருவாக்கப்பட வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க புதிய அரசியல் கலாசாரமொன்றின் அவசியம் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் எதிரிகள் தம்மை உடல் மற்றும் உளரீதியாக பலவீனப்படுத்த பல்வேறு வழிகளில் முயற்சி செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

சொந்த ஊரான அம்பலாங்கொடையில் சர்வதேச விமான நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் துறைமுகங்களை அமைக்கும் எண்ணம் தமக்குக் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாதாரண பொதுமக்களுக்கு நலன்களை வழங்கக்கூடிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை அளித்து அவர்களை ஏமாற்றக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளில் ஈடுபடும் இந்த அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-2)

# வவு. மீள்குடியேற்ற மக்களுக்கு ஜப்பான் அரசாங்கம் நிதி உதவி

வவுனியாவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்காக அடிப்படை வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்காக ஜப்பான் அரசாங்கம் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதற்காக 11 மில்லியன் ரூபாய்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித பாதுகாப்பு வேலைத் திட்டத்துக்காக ஒரு இலட்சம் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. மக்கள் வாழ்வாதார அபிவிருத்தி நிதியத்திடம் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பானின் கொழும்பு தூதரகத்தின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிதி வவுனியாவில் குடியேற்றப்பட்டுள்ள சுமார் 625 குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை ஒன்றை ஜப்பான் தூதுவர் நொபியிடோ ஹோபோ மற்றும் மக்கள் வாழ்வாதார அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளார் பிரியந்த குமார ஆகியோருக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-2)

# தாய்மார்கள் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லத்தடை!

## விரைவில் வருகிறது சட்டம் – திஸ்ஸ கரலியத்த

18 வயதின் கீழ் பிள்ளைகள் இருக்கும் தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதைத் தடுக்கும் வகையில் விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுவர்களின் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளன. அவற்றை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். சட்டத்திலும் திருத்தங்களை மேற்கொள்கின்றோம்.

ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகள் இருக்கும் தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதை தடுக்கும் வகையில் தடைச்சட்டம் கொண்டு வரப்படுவதா? இன்றேல் 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருக்கும் தாய்மார்களை வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதை தடை செய்யும் வகையில் சட்டத்தை திருத்துவதா என்பதுதான் பிரச்சினையாக இருக்கின்றது.

எவ்வாறோ விரைவில் தடைச் சட்டம் கொண்டு வரப்படும். இதே வேளை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் ஐந்து நிறுவப்பட்டுள்ளன.

அதில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றனர் என குறிப்பிட்டார். (ந-2)

# ரங்கநாதப்பெருமாள் கோவில் பிரமோற்சவம்

(கிளிநொச்சி)

கிளி.வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் ஆலய பிரமோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ந-2)

# 2012.08 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1305-ஸ்கொட்லாந்தின் நாட்டுப்பற்றாளர் வில்லியம் வொலஸ் இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னனால் நாட்டுத்துரோகத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

★1541-பிரெஞ்சு நாடுகாண் பயணி ஜாக் கார்ட்டியேர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தார்.

★1555-நெதர்லாந்தில் கால்வினிஸ்துகளுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்பட்டன.

★1784-மேற்கு வட கரோலினா (தற்போது கிழக்கு டென்னசி) பிராங்கிளின் என்ற பெயரில் தனி நாடாக அறிவித்தது. இது ஐக்கிய அமெரிக்காவால் ஏற்கப்படவில்லை.

★1821-மெக்சிகோ ஸ்பெயினிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★1839-சீனாவின் கிங் சீனர்களுடன் போரிடுவதற்காக ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கைக் கைப்பற்றியது.

★1914-முதலாம் உலகப் போர்: ஜப்பான் ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.

★1929-பாலஸ்தீனத்தில் அரபுக்கள் யூதர்களைத் தாக்கி அவர்களில் 133 பேரைக் கொன்றனர்.

★1939-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பின்லாந்து, உக்ரைன், போலந்து ஆகியவற்றை தமக்கிடையே பகிர்வது என்றும் இரகசிய முடிவெடுக் கப்பட்டது.

★1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியினர் லண்டன் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர்.

★1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் போர் விமானம் ஒன்று இங்கிலாந்தில் பாடசாலை ஒன்றின் மேல் வீழ்ந்ததில் 61 பேர் உயிரிழந்தனர்.

★1948-ஏ.கே.செட்டியார் தயாரித்த காந்தி பற்றிய முதல் வரலாற்றுத் திரைப்படம் தமிழிலும் தெலுங்கிலும் வெளியிடப்பட்டது.

★1952-அரபு லீக் அமைக்கப்பட்டது.

★1966-லூனார் ஆர்பிட்டர் 1 முதன் முதலாக சந்திரனின் சுற்று வட்டத்தில் இருந்து எடுத்த பூமியின் படங்களை லூனார் ஆர்பிட்டர் 1 அனுப்பியது.

★1973-இண்டெல்சாற் தொலைத் தொடர்பு செய்மதி ஏவப்பட்டது.

★1975-லாவோசில் கம்யூனிசப் புரட்சி வெற்றி பெற்றது.

★1990-ஆர்மேனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலை பெற்றது.

★1990-மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் ஒக்டோபர் 3 இணைய விருப்பதாக அறிவித்தன.

★2000-பஹ்ரேய்னில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 143 பேர் உயிரிழந்தனர்.

★2006-நியூசிலாந்தின் ஆளுநராக ஆனந்த் சத்தியானந்த் பதவியேற்றார்.

### பிறப்புக்கள்

★1754-பதினாறாம் லூயி, பிரெஞ்சு மன்னன் (இ.1793)

★1868-அய்யன் காளி, தலித் போராளி (இ.1941)

★1914-டி.எஸ்.பாலையா, தமிழ்த் திரைப்பட நடிகர்


★1919-சுசுமு ஒனோ, ஜப்பானியத் தமிழறிஞர் (இ.2008)

★1978-கோபி பிரயன்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1951-வ.ரா.,தமிழ் எழுத்தாளர் (பி.1889)

★1997-ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (பி.1961)



டி.எஸ்.பாலையா

டி.எஸ்.பாலையா அல்லது தமிழ் திரையுலகில் பாலண்ணன் தமிழ்த் திரையுலகில் ஒரு பழம்பெரும் நடிகர். திருநெல்வேலியைச் சேர்ந்தவர். கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ்த் திரையுலகின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

1936 ஆம் ஆண்டு வெளியான சதிலீலாவதி இவரது முதல் படமாகும். ஆரம்ப காலங்களில் வில்லன் வேடங்களில் முத்திரை பதித்தார். பிற்காலங்களில் நகைச்சுவை வேடங்களிலும் புகழ் பெற்றார். காதலிக்க நேரமில்லை, ஊட்டி வரை உறவு இவை இவரது நகைச்சுவை நடிப்பிற்கு மகுடங்களாக அமைந்தன.

**அவரின் புகழ்பெற்ற பிற படங்கள்:**

வேலைக்காரி(1949), உத்தம புத்திரன் (1940), ஆர்யமாலா (1941), மனோன்மணி (1942), மீரா (திரைப்படம்) (1945), வால்மீகி (1946), மோகினி (1948), ஏழை படும்பாடு (1950), ஓர் இரவு (1951), மதுரை வீரன் (1956), பாகப் பிரிவினை (1959), திருவிளையாடல் (திரைப் படம்) (1965), பாமா விஜயம் (1967), தில்லானா மோகனாம்பாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்களுக்கு பதில் சொல்கிறீர்களா? தமிழர்களுக்கு உரிய தீர்வு வழங்குகிறீர்களா?

## பதிலும் முடிவும் அரசிடம்தான் - சம்பந்தன்



போர்க்குற்றங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமையை ஏற்படுத்தப்போகின்றீர்களா அல்லது தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை கொடுத்து அதன் மூலமாக ஏற்படுகின்ற நல்லிணக்கம், புரிந்துணர்வு மூலமாக நாட்டில் சமத்துவத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தப்போகின்றீர்களா என்பதற்கு அரசாங்கமே பதிலளிக்க வேண்டும் என தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்த உரையாற்றிய அவர்,

நல்லிணக்க ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புரிந்துணர்வை ஏற்படுத்தி நாட்டில் சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இராணுவ மயமாக்கல் குறைக்கப்பட வேண்டும். அதிபாதுகாப்பு வலயங்கள் கலைக்கப்பட வேண்டும். மக்கள் தங்கள் சொந்தக் காணிகளுக்கு திரும்பிச்செல்ல வேண்டும். மக்களுடைய காணிகள் திருப்பி மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் சம்பந்தமாக முடிவெடுக்கப்பட வேண்டும். அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களின் குடும்பங்களுக்கு தக்க விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டில் சமாதானமும் சமத்துவமும் ஏற்படக்கூடிய வகையில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படக்கூடிய வகையில் அதிகப்படியான அதிகாரப்பகிர்வுகளுடன் ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும்.

இவற்றை நிறைவேற்றுவது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு செயற்றிட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதை பகிரங்கப்படுத்த வேண்டும். அதை அமுல்படுத்த வேண்டும். அதை அமுல்படுத்துவது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் சபை ஆணையாளர் அரசாங்கத்திற்கு உதவலாம் ஆலோசனைகளை வழங்கலாம்.

இது சம்பந்தமாக 2013 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தின்போது ஆணையாளர் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த கருமங்களை சர்வதேசத்தின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்ற வேண்டிய ஒரு கட்டாயக்கடமை, விலத்த முடியாத ஒரு பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

ஜனாதிபதி, அமைச்சருடைய பேச்சின் அடிப்படையில் இந்தத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் அவர்கள் வெற்றி பெற்றால் எங்களுடைய கடமைகள் என்று சர்வதேசத்திற்கு கூறுவோம்.

ஏனென்றால் கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் எங்களுடன் நிற்கிறார்கள். அதனால் உங்களுடைய அழுத்தங்கள் தேவையில்லை என்று கூறவிருக்கின்றார்கள். அதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள போவதில்லை.

கிழக்கு மாகாணம் மிக மோசமாக பாதிக்கப்பட்ட ஒரு மாகாணமாகும்.

அதை உணர்ந்து பல்வேறு நாடுகளும் நிறுவனங்களும் அமைப்புகளும் பலவித உதவிகளை செய்கின்றார்கள். இது நீங்கள் செய்யும் அபிவிருத்தியல்ல. இந்த மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்களை கண்டு உலக நாடுகள் செய்யும் அபிவிருத்தி.

நாங்கள் எவருக்கும் சவால் விடவில்லை. எங்கள் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, ஒரு அரசியல் தீர்வை அடைவதற்கு நீண்டகாலமாக ஆயுதப்போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்து அது முடிவடைந்ததன் பின்பாகவும் தமிழ் மிதவாத தலைவர்கள் மிகவும் நிதானமாக செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். ஆனால், அது முடியாமலிருக்கின்றது. இந்த நிலைமையை தொடர முடியாது.

எங்களுடைய தேர்தல் முடிவின் மூலமாக சர்வதேசத்திற்கு ஒரு தெளிவான செய்தியை அனுப்ப வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கின்றோம். அந்த முடிவைத்தான் இந்த தேர்தல் மூலமாக நீங்கள் ஏற்படுத்தப்போகின்றீர்கள். (ந-2)

## சனசமூக நிலைய விளையாட்டு விழா

(நல்லூர்)

ஊரெழு வளர்பிறை சனசமூக நிலையமும் பழைய மாணவர்களும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வளர்பிறை சனசமூக நிலையத்தலைவர் இ.ராதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலி.கிழக்கு பிரிவுத்தலைவர் இ.மயில்வானம், ஊரெழு கணேசாவித்தியாலய அதிபர் சி.கிரிதரன், ஊரெழு கிராம உத்தியோகத்தர் சோ.ஜெயந்திரன், இடைக்காடு மகா வித்தியாலய ஆசிரியர் ம.ரங்கநாதன் , சமுர்த்தி உத்தியோகத்தர் சேவற்கொடியோன், சர்வோதய பிரதேச இணைப்பாளர் செல்வி ஜெயமதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-3-134)


## புதிய உறுப்பினர்களை நியமிக்கத்தடை!

இலங்கை வங்கி ஊழியர் தொழிற்சங்கம் புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான கூட்டத்தை நடத்துவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

அதேவேளை, சங்கத்தின் புதிய செயலாளரைநியமிப்பதற்குமத்தியகுழுவைகூட்டவேண்டுமெனவும் நீதிமன்றம் பணித்துள்ளது.

வங்கி ஊழியர் சங்கத்தின் மக்கள் வங்கிப்பிரிவு அச்சங்கத்தின் 257 மத்திய குழு அங்கத்தவர்களுடன் இணைந்து தாக்கல் செய்த மனுவையடுத்தே மேற்படி கொழும்பு மாவட்ட நீதிபதி ஜி.ஏ.தம்மிக கனேபொலவினால் மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் புண்ய ஜயதிலக்கவின் நெறிப்படுத்தலில் நவோதா விஜேரட்ன தாரக நாணயக்காரவுடன் பைஸர் முஸ்தபா ஆஜரானார். (ந-2)




ராஜரட்டை பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்கள் அநுராதபுர போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வைத்தியர் லாலந்த ரணசிங்கவின் வீட்டின் மீதான கைக்குண்டு தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

## இலங்கையில் நாளாந்தம் 650 பேர் உயிரிழப்பு

புகைத்தல், மதுபானம் மற்றும் அதீத கொழுப்புணவின் காரணமாக இலங்கையில் நாளாந்தம் 650 பேர் பலியாவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் உதவி செயலாளர் பாலித மகிபால இதனைத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நோய்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளாந்தம் 1250 குழந்தைகள் பிரசவம் ஆகின்றன. அதேவேளை அண்ணளவாக 1000 மரணச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மரணிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அடையாளம் காணப்பட முடியாத நோய்களினால் மரணிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## 15 ஆவது ஆண்டு ஆன்மீக பெருவிழா

### சர்வதேச இந்துமத குருபீடம் நடத்துகிறது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருபீடம் நடாத்தும் 15 ஆவது ஆண்டு ஆன்மீக பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றக்கிழமை வரை நடைபெறவுள்ளதாக சர்வதேச இந்துமத குருபீட நிர்வாக பணிப்பாளரும் சங்கானை ஐ.டி.எம். இயக்குநருமான பிரம்மஸ்ரீ நித்யசுதானந்த சர்மா அறிவித்துள்ளார்.

இப்பெருவிழாவில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லை ஆதீன சிவன் ஆலயத்தில் மஹாகணபதி ஹோமம் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சங்கானை இலுப்பைத்தாழ் ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் விசேட திரவ்ய ஹோமம் மாலை 5 மணிக்கு வடலிய டைப்பு ஸ்ரீ ஐயனார் கோவிலில் விசேட ஐயப் பன் பூஜை என்பன நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் கல்யாண மண்டபத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக்குருஜி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் பல்துறை சார்ந்த 150 பிரமுகர்களுக்கு பாராட்டும் நடைபெறவுள்ளது. (ந-9)

## "சீனா டவுன்" இரவுச்சந்தை இலங்கைக்கு வருகிறது

மலேசியா, சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகளில் செயற்படும் சீனா டவுன் என்ற இரவுச்சந்தை அம்பாந்தோட்டை பகுதியில் அரம்பிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இச்சந்தை தினமும் காலை 9 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரை திறந்திருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் தங்கள் தயாரிப்புக்கள் மற்றும் சாதனங்களை இந்த சீனா டவுன் சந்தையில் விற்பனை செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மத்தால விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் உத்தேச தொழில்நுட்ப பூங்கா என முன்மொழியப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் இந்தச் சந்தையால் அதிகம் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

18

எல்லாளனின் நீதி வழுவாமையைக் கூற முயலும் அக்கதைகள் நம்பகமானவையல்ல. அவனது செங்கோலாட்சியைப் புலப்படுத்த மஹாவம்சம் எடுத்துக்கொண்ட மரபுக்கதைகள் எனலாம். எனினும், மஹாவம்சம் கூறுகின்ற ஒருகதை, எல்லாளன் பௌத்தமதத்திற்கு சமய துறையில் ஆதரவு அளித்தமையை நிரூபிக்கின்றது. எல்லாளன் தேரில் ஏறி சேத்திய கிரி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது தேரின் அச்சு சேத்திய பர்வத தாதுகோபம் ஒன்றில் பட்டு தூபிக்கு சேதத்தை ஏற்படுத்தியது. மன்னன் தேரில் இருந்து குதித்து தனது சிரசினை தேர்ச்சில்லினால் உடனடியான துண்டிக்குமாறு கேட்டுக் கொண்டான். 'தெரியாமல் நிகழ்ந்தது. அமைதி அடைக தூபியைத் திருத்திவிடுவோம்.' என்றனர். 15 கற்களே சிதைவடைந்திருந்தன. அப்படியிருந்தும் அந்தத் தாதுகோபத்தைப் புனரமைக்க எல்லாளன் 15 ஆயிரம் கஹாப் பணங்களைச் செலவிட்டான்.

எல்லாளனின் ஏகாதிபத்தியம் இலங்கை முழுவதும் பரவியிருந்தது. கல்யாணி, உருகுணை முதலான தென்னிலங்கைச் சிற்றரசுகளும், நாகதீவு, வன்னி முதலான உத்தரதேச சிற்றரசுகளும், கோகர்ணம், பல்லவங்கம் முதலான கிழக்கிலங்கைச் சிற்றரசுகளும் அதன் ஆட்சியை ஏற்றிருந் தன.


ருவான்வெலிசய-1860-அநுராதபுரம்


ருவான்வெலிசய (தற்போதுள்ள வடிவம்)

## துட்டகாமினி மன்னன்



பண்டைய அநுரதபுர அரசின் அழிபாடுகள்

### துட்டகாமினி மன்னன்
### உருகுணையின் எழுச்சி- மகாநாகன்

எல்லாளன் காலத்தில் இரண்டு தெளிவான இராச்சியங்கள் இலங்கையில் இருந்தன. ஒன்று அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இராஜரட்டை, மற்றையது மகாகமத்தைத் தலைநகராகக் கொண்ட உருகுணை. களுகங்கை- மகாவலி கங்கைக்கு வடக்கேயுள்ள பிரதேசம் எல்லாளனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அவற்றிற்குத் தெற்கே அமைந்த பிரதேசம் உருகுணையாக விளங்கியது. ஆரியர்களின் ஆரம்பக் குடியேற்றங்களில் ஒன்றாக உருகுணைப் பிரதேசம் அமைந்திருந்தது. அனுராதபுரத்திலிருந்து துரத்தப்படுகின்ற சிங்கள மன்னர்கள் தலைமறைவாகிக் கரந்துறையும் பிரதேசமாக உருகுணை விளங்கியது. எல்லாளன் காலத்தில் உருகுணையை மிக முக்கியமான இராச்சியமாக எழுச்சியுற வைத்த பெருமை காக்கைவண்ணதீசன் என்பவனுக்குரியதாகும். ஈழத்தின் புகழ் பூத்த மன்னனாக விளங்கிய துட்டகாமனி, அபயனின் தந்தையே இந்தக் காக்கைவண்ணதீசனாவான். காக்கைவண்ணதீசனின் அரசபரம்பரையை உன்னதமானதாகக் காட்டுவதற்கு பாளிநூல்கள் முயல்கின்றன. அதனால் அவனது பரம்பரையைத் தேவநம்பியதீசனின் வழிவந்ததாகக் காட்டுவதற்கு இந்நூல்கள் முயல்கின்றன.

அனுராதபுரத்து மன்னன் தேவநம்பிய தீசனின் இரண்டாவது சகோதரனும், யுவராஜாவுமான மகாநாகன் இருந்தான். அனுராதபுரத்தின் மணி மகுடம் தனது கணவனுக்குப்பின்னர் தனது மகனுக்கு வரவேண்டும் என்று கருதிய தேவநம்பிய தீசனின் மகாராணி, மகாநாகனைக் கொலை செய்ய ஒரு சதி செய்தாள். நஞ்சூட்டப்பட்ட மாங்கனி ஒன்றினை மாங்கனிகள் நிரம்பிய தட்டொன்றில் மிக மேற்கனியாக அடுக்கி, மகாநாகனுக்கு அனுப்பி வைத்தாள். அவ்வேளை மகாநாகன் தாரகா குளவேலைகளை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்தான். மகாராணியின் மகனான சிறுவனும் அவனுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். இந்த நஞ்சூட்டப்பட்ட மாங்கனியை அச் சிறுவன் எடுத்து உண்டு இறக்க நேர்ந்தது. இந்தத் துர்மரணத்தினால் பயமுற்ற மகாநாகன் தன் மனைவிமார், பணியாட்கள் ஆகியோருடன் உருகுணைக்குத் தப்பி ஓட நேரந்தது என்கிறது மஹாவம்சம்!

ஓடும் வழியிலிருந்த ஜத்தலாலா விகாரையில் அவனின் மனைவியரில் ஒருத்தி ஓர் ஆண்மகனைப் பெற்றாள். அக்குழந்தைக்கு விகாரையின் பெயரையும், தன் தமையன் தேவநம்பிய தீசனின் இறுதிப் பெயரையும் இணைத்து ஜத்தலாலா தீசன் எனப்பெயரிட்டான். மகாநாகன் உருகுணைக்கு ஓடிவந்தபோது, கதிர்காமச் சிற்றரசனாக விளங்கிய ஒரு சைத்திரிய தமிழ்மன்னன் தக்கவாறு வரவேற்று, தன் தலைநகரிலிருந்து இரண்டு காத தூரத்தில் வளமான ஒரு பிரதேசத்தில் குடியமர்த்தினான். இவ்விடத்தினை மகாநாகன் பெரியதொரு கிராமமாக்கி மகாகமம் எனப் பெயரிட்டுக்கொண்டான். பின்னர் மகாகமத்தை தலைநகரமாகக் கொண்டு மன்னனாக முடிசூடிக் கொண்டான். ஒரு சிற்றரசில் இரண்டு ஆட்சித் தலைவர்கள் உருவாகிவிட்டனர். உடனடியாகப் பிரச்சினைகள் உருவாகவில்லையாயினும், மகாநாகனின் மறைவுக்குப் பின்னர் மகாகமத்திற்கு அவன் மகன் ஜத்தலாலாதீசன் ஆட்சியாளனாகினான். அவனுடைய காலத்தில் கதிர்காமச்சைத்திரிய ஆட்சியாளனுக்கும் மகாகமத் தலைவனுக்கும் பிரச்சினைகள் ஏற்படலாயின. ஜத்தலாலா தீசனுக்குப்பின்னர் கோதபாயன் தலைவனானான் இவன் உருகுணையில் வாழ்ந்த சிங்கள மக்களின் ஆதரவினை, பிரித்து ஆளும் தந்திரத்தின் மூலம் பெற்று, ஒருநாளிரவு சைத்திரிய மன்னன் கமணியையும் அவனது பத்துப் புதல்வர்களையும் வாளுக்கிரையாக்க மாளிகையைச் சூழ்ந்தபோது, கிரிந்தலையில் இருந்த இருமக்களான தர்மராஜாவும் உதியும் தவிர்ந்த ஏனையோர் கொல்லப்பட்டனர். கோதபாயன் உருகுணையின் மன்னனாகியதும் கதிர்காமம் திரும்பிவர விரும்பாது கிரிந்தலையில் தங்கிவிட்ட தர்மராஜாவும் உதியையும் சாந்தப்படுத்த விரும்பி, தர்மராஜாவின் மகளான அபிஸ்வரியாவை தனது மகனான காக்கைவண்ணதீசனுக்குத் திருமணம் செய்து வைத்தான். அவர்களுக்கு திக்காபயன் என்றொரு மகன் பிறந்தான். கோதபாயன் இறந்ததும் அவனது புதல்வனான கவந்ததீசன் எனும் காக்கைவண்ணதீசன் அரசனானான்.


கவந்தீசன்- சிலை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை

## 2012 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 01


திரு. க.கலாமோகன்

வேறுபட்ட உருவத்தைத் தெரிவு செய்க


1)



2)



3)



பின்வரும் எண்கோலத்தில் வரவேண்டிய இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

4)

| | | |
|---|---|---|
| 5 | 9 | 14 |
| 15 | 10 | 5 |
| 3 | 8 | ? |

(..........)

5)

| | | |
|---|---|---|
| 4 | 72 | 18 |
| 3 | 45 | 15 |
| 6 | ? | 12 |


(..........)


6)

| | | |
|---|---|---|
| 7 | 6 | 13 |
| 6 | 4 | 10 |
| 5 | 3 | ? |


(..........)


7) வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.







1) 2) 3)







1) 2) 3)






1) 2) 3)

10) பட்டது என்னும் சொல்  எனவும்

முப்பது எனும் சொல்  எனவும் உருக்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கருத்து என்னும் சொல்லைச் சரியாக எழுதக் கூடிய விதத்தை தெரிவு செய்க.




1) 2) 3)


11) குருதி = 234 எனின் திருகு =..........

வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


1) 243 2) 324 3) 432

எண்களின் பெறுமதி உருவங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது அவற்றை விளக்கிக் கொண்டு உருவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





12)  இவ் உருவின் பெறுமானம் யாது?

1) 5 2) 3 3) 4

13)  இவ் உருவின் பெறுமானம் யாது?

1) 3 2) 5 3) 4

14)  வெற்றிடத்தில் வரவேண்டிய இலக்கம் யாது?



1) 16 2) 18 3) 7

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்

15) 'சின்னஞ் சிறு கிளியே' என்பதன் கருத்து
1) சிறிய சிறிய கிளி
2) சிறு பிள்ளை
3) சிறு துன்பம்

16) கலி தீர்த்தே என்பதன் கருத்து
1)துன்பம் நீக்கியே
2) துன்பத்தை ஏற்படுத்தல்
3) மகிழ்ச்சியாக இருத்தல்

17) உலகம் என்பதைக் குறிக்கும் வேறு சொல்.
1) நாடு 2)தேசம் 3)பூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மூன்று எழுத்துச் சொல்லாகும். இச் சொல்லைக் கண்டுபிடித்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

18) முதல் எழுத்து ஓடத்தில் உண்டு மடத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து நாகத்தில் உண்டு தாகத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து பொய்யில் உண்டு பொதியில் இல்லை .(.................................)

19) இது நான்கு எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும். முதலெழுத்து தாமத்தில் உண்டு சாமத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து வனத்தில் உண்டு வானத்தில் இல்லை மூன்றாம் எழுத்து தரத்தில் உண்டு தசத்தில்இல்லை. நான்காம் எழுத்து கும்மியில் உண்டு குடுமியல் இல்லை.
(.............................)

பின்வரும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

20) தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோம இலக்கம் செய்ய முடியும். 20 என்னும் உரோம இலக்கத்தைச் செய்ய நான்கு தீக்குச்சி தேவை. 19 என்னும் உரோம இலக்கம் செய்ய தேவையான தீக்குச்சி?
1) 5 2) 4 3) 3

21) 19,25,18 என்பவறறை உரோம இலக்கத்தில் செய்வதற்கு அதிக தீக்குச்சி தேவையான எண் பெறுமானம் யாது?
1) 19 2) 25 3) 18

22) எனது வயது 5 இருந்த போது எனது அண்ணாவின் வயது 10 ஆகும். இன்னும் 7 வருடங்களில் எனது வயது 12 இருக்கும் போது அண்ணாவின் வயது எத்தனை?
1) 27 2) 17 3) 37

பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக..

உங்கள் அனைவரதும் சுகம் அறிய ஆவலோடு காத்திருக்கிறேன். நான் இங்கு வந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாதமாகிவிட்டன. தங்குமிட விடுதியில் உணவு பரவாயில்லை எனினும் வீட்டை விட்டு தூர இடத்தில் வாழ்வது கவலைதான். மாலை நேரத்தில் ஏனைய பிள்ளைகள் விளையாடப் போனாலும் நான் அதிகம் நேரம் புத்தகங்களை படிப்பதிலேயே செலவிடுகிறேன்.

23) இக் கடிதத்தை எழுதியவர் இப்போது இருப்பது வெளிநாட்டிலாகும்.
1) ஆம்
2)இல்லை
3) கூறமுடியாது

24) இக் கடிதம் அவரது வீட்டிலுள்ள ஒருவருக்கே எழுதப்பட்டுள்ளது.
1 ஆம்
2) இல்லை
3)கூறமுடியாது

25)இக் கடிதத்தை எழுதியவர் கல்விக்காக வீட்டை விட்டு வேறிடத்தில் வசிப்பவராவார்
1)ஆம்
2)இல்லை
3)கூறமுடியது

வெற்றிடத்திற்கு நன்கு பொருந்தக் கூடிய சொல்லின் கீழ் கோடிடுக.

மிகவும் 26) ............................ மரணமடைந்த 27) ............................................ நிலை எல்லோரின் மனதையும் 28)................................................ வைத்தது.

| | | |
|---|---|---|
| 1) கவர்ச்சியாக | 1. பிச்சைக்காரனின் | 1. கலங்க |
| 2) கவலைக்கிடமாக | 2. குழந்தையின் | 2.நடுங்க |
| 3) மகிழ்ச்சியாக | 3. சுட்டியக்காரனின் | 3. வியக்க. |

29) 2007 ம் ஆண்டில் 365 நாட்களும் 2008 ம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2007 ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி திங்கட்கிழமையாகும். 2008 ம் ஆண்டில் ஜனவரி 1 ம் திகதி செவ்வாய்க்கிழமையாகும். இதற்கேற்ப 2009 ம் ஜனவரி 01 ம் திகதி
1) திங்கட்கிழமை.
2) புதன்கிழமை
3) வியாழக்கிழமை

30) 2010 ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி வெள்ளிக்கிழமை எனின் 2011 ஆண்டு ஜனவரி 1ம் திகதி என்ன கிழமை?
1) சனிக்கிழமை
2) ஞாயிற்றுக்கிழமை
3) திங்கட்கிழமை

முதலில் தரப்பட்டுள்ள கருத்தை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க

31)கண்மூடுதல்
1)இறத்தல்
2) நித்திரை செய்தல்
3) கண்ணைத் திறந்திருத்தல்.

32)தலைகாட்டுதல்
1) தலையை நீட்டுதல்
2) வெளிவருதல்
3) தலையைப் பெரிதாக்குதல்

33) 1kg 250g பருப்பின் விலை ரூபா 55.00 ஆகும்
250g பருப்பின் விலை யாது?
1) ரூபா 27.50
2) ரூபா 13.75
3) ரூபா 11.00

34) விகடகவி என்ற சொல் இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள விடைகளிடையே இச் சொல் எழுதப்பட்டுள்ள முறை யாது?
1) 53255
2) 53425
3) 53235

பின்வரும் தகவல்களை அவதானித்து விடை தருக

| | |
|---|---|
| 1kg சீனி + 250g தேயிலை ரூபா | = 180ரூபா |
| 250g தேயிலை + 500g விசுக்கோத்து ரூபா | = 230ரூபா |
| 1kg சீனி + 500g விசுகோத்து ரூபா | = 170ரூபா |


35) 500g தேயிலை + 1kg விசுக்கோத்துவின் விலை யாது?
1) ரூபா 230
2) ரூபா 460
3) ரூபா 410

36) 2kgசீனி + 1kg விசுக்கோத்துவின் விலை யாது?
1) ரூபா 190
2) ரூபா 350
3) ரூபா 340

37) 1kg சீனி + 500g விசுகோத்து விலை யாது?
1)ரூபா 170
2) ரூபா 230
3) ரூபா 180


உருவில் காணப்படும் வடிவம் உள்ள தாளை முதலில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து இரு பக்கங்களையும் சேர்த்துப் புள்ளிக் கோடுகள் வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் நாற்பக்கல்களின் எண்ணிக்கையும் முறையே யாவை?

38)




1) 4 உம் 2 உம்
2) 3 உம் 1 உம்
3) 2 உம் 2 உம்


39)




1) 3 உம் 1 உம்
2) 3 உம் 2 உம்
3) 4 உம் 2 உம்

உருவில் காணப்படும் உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தைப் புள்ளிக் கோடு வழியேவெட்டும் போது கிடைக்கும் முகத்தின் வடிவம்.

40)



1) செவ்வகம்
2) வட்டம்
3) முக்கோணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள்... ஒரு நகரம்...

## கிளிநொச்சி...



இங்கிருந்து இரண்டு மூன்று ஒழுங்கைகள் கடந்து செல்லும் பொழுது ஒரு காணிக்குள் பலவகையான வாகனங்கள் குவிக்கப்பட்டிருந்தன... இந்த வாகனங்கள் எல்லாம் முள்ளிவாய்காலில் கைவிடப்பட்டவை... உரிமைகோர ஒருவரும் இன்னும் முன்வரவில்லை... அவ்வாறு வருவதற்கும் உரிமையாளர்கள் ஒருவரும் இல்லைப்போல... இதைப்படம் எடுத்துக்கொண்டிருக்கும் பொழுது பொலிஸ் அதிகாரி ஒருவர் வந்ததைக் கவனிக்கவில்லை... படம் எடுத்துவிட்டு திரும்பியபோது அவர் என்னைப் பார்த்து நக்கலாகச் சிரித்துக் கொண்டிருந்தார். வழமையான விசாரணை.. யார் நீ.. ஏன் படம் எடுக்கிறாய்... என சிங்களத்தில் கேட்ட கேள்விகளுக்கு நான் சிங்களத்தில் பதில் அளிக்க... மீண்டும் நக்கலான சிரிப்புடன் அவரது தலையசைப்பில் என்னைப் போகச் சொல்வதாக உணர்ந்தேன்....இந்த செய்கை "நீ எல்லாம் படத்தை எடுத்து என்னத்தைக் கிளிக்கப்போகிறாய்... எல்லாவற்றையும் நாம் அடக்கிப்போட்டோம் தானே..." என தலைக்கனத்துடன் கூறுவதைப்போல இருந்தது... இது என் உள்ளத்தில் கவலையையும் கோபத்தையும் உருவாக்கியபோதும் ஒன்றும் செய்யமுடியாதவனாக அந்தப் பொலிஸ்காரனிடமிருந்து தப்பித்தால் போதும் என எண்ணிக் கொண்டு நண்பரின் மோட்டார் வாகன்த்தில் ஏறி அமர்ந்தேன்...

மோட்டார் வாகனத்திற்கு பெற்றோல் நிரப்பினோம். அந்த நிரப்பு நிலையத்திற்கருகில் வன்னியின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றான வாய்க்கால் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த வாய்க்கால் நீரை அதுபோகின்ற வழிகளில் வாழ்கின்ற மக்கள் பல தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். இதைப் பற்றிய எந்த அக்கறையுமின்றி இவ்வாறான நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளினால் இந்த நிலையத்திலிருந்து வெளிவரும் எண்ணைக் கழிவுகள் வாய்க்காலில் சேர்ந்து அதை மாசடையச் செய்கின்றன. நீண்ட காலத்தில் இதனால் மக்களுக்கு பல பாதிப்புகள் வருவதுடன் வாய்க்கால் வழியோடும் நீரும் பயனற்றும் போகலாம். இதைத் தடுப்பதற்கு இப்பொழுது கவனம் செதுத்தவேண்டியுள்ளது யார் இதைச் செய்வார்கள்?

மாலையில் பிரபல்யமான இளம் எழுத்தாள நண்பரின் வீட்டுக்குச் சென்றோம். அவர்களது வீடு... ஒரு கொட்டில்... எனது குடும்பம் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு வாழ்ந்ததை மீள நினைவுபடுத்தியது அது. சிறிய கொட்டில். அதற்குள் மூன்று பேர் சுதந்திரமாக எழுந்து நிற்பதோ, கால் நீட்டிப் படுப்பதோ சாத்தியமில்லாத ஒன்று. இதற்கு முன்பாக இதைவிட இன்னும் சிறிய கொட்டில் ஒன்று இருந்தது. இது அவர்களது குசினி (சமயலறை). இதற்குள் தலையைக் குனிந்து சென்று குந்தியிருந்தவாறு மட்டுமே சமைக்கலாம். தந்தை இல்லாத குடும்பம். போராட்டத்தில் போராளியாக மரணித்த அண்ணனை இழந்த குடும்பம். போராளியாகி மீட்டு வரபட்ட தங்கை, சமூக அக்கறையுடன் எழுதுகின்ற பட்டதாரியான இளம் எழுத்தாளர். போர், தந்த மனவடுக்கள் மற்றும் பொருளாதார சுமைகள் என்பவற்றை சுமக்க முடியாது... சுமந்து திரிகின்ற அவரது தாய்... அம்மா அனைவருக்கும் தேநீர் கொடுத்து வரவேற்றார். வறுமையிலும் வரவேற்புக்கும் உபசரிப்புக்கும் பஞ்சமில்லை நம்தேசத்தில்... இவர்களைப் போன்று வறுமையிலும் சிறிய கொட்டில்களிலும் பல குடும்பங்கள் அந்தப் பகுதிகளில் வாழ்கின்றன. சில குடும்பங்களுக்கு காணிகள் இருக்கின்றன... சிலகுடும்பங்களுக்கு காணிகளும் இல்லை... ஒருபுறம் அரசாங்கம் வீடுகட்டிக் கொடுக்கின்றது... இந்தியா வீடுகட்டிக் கொடுக்கின்றது... என பெரிய விளம்பரங்கள் மட்டும் செய்திகளில் வருகின்றன... அவ்வாறு வீடுகள் சில கட்டிக் கொடுக்கப்பட்ட போதும் இவர்களுக்கு வீடு இல்லாமல் போனதற்கு காரணம் என்ன?

வன்னியிலிருக்கின்ற வறுமையான குடும்பங்களும் மற்றும் மலையகத்திலிருந்து இங்கு வந்து குடியேறி வாழ்கின்ற குடும்பங்களும் யாராலும் கவனிப்பாரற்ற நிலையிலேயே வாழ்கின்றனர் என்பதையும் அறியக் கூடியதாக இருந்தது. இதன் விளைவாகத்தான் மேற்குறிப்பிட்ட எழுத்தாளரின் வீடும் கட்டப்படாது இன்னும் குடிசையாகவே இருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு பல்வேறு அரசியல் மட்டுமல்ல வர்க்க, பிரதேச, சாதிய காரணங்கள் என பல இருக்கின்றன.

இளம் எழுத்தாளர் நண்பரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு நண்பரின் வீடு நோக்கி திரும்பினோம். இப்பொழுது நண்பனின் வாகனம் அவரின் வீடு இருந்த ஒழுங்கையால் சென்று கொண்டிருந்தது... அப்போது நண்பர், இருந்த ஒழுங்கையால்தான் இசைப்பிரியாவும் அவரது தோழிகளும் ஒவ்வொரு நாளும் நடந்து வேலைக்குச் செல்வார்கள்... எனக் கூறிக்கொண்டு அவரிருக்கின்ற வீட்டைக் கடந்து சென்று அருகிலிருந்த ஒழுங்கையில் நிற்பாட்டினார். அந்த ஒழுங்கைக்கு அருகிலிருந்த காணியில் கதவு, ஜன்னல் மட்டுமல்ல அதன் சட்டங்களும் இல்லாத வெறுமையான கட்டடங்கள் மட்டுமே இருந்தன. இங்குதான் இசைப்பிரியாவும் அவரது நண்பர்களும் போருக்கு முன் வாழ்ந்தார்கள். அவர்கள் பயன்படுத்திய கிணறு, தொட்டி என்பன அதன்பின் யாரும் பயன்படுத்தாது பாழடைந்து போயிருந்தன. இந்தக் காணியை இப்பொழுது அரசாங்கம் தனது அதிகாரத்திற்கு உட்படுத்தி புனர்நிர்மாண வேலைகளுக்காக புனரமைப்பு செய்கின்றது. இவ்வாறு புலிகளின் நிர்வாகப் பிரிவுகள் இருந்த பல கட்டங்களும் காணிகளும் இவ்வாறான விளம்பரத்துடன் காட்சியளிக்கின்றன. இப்பொழுது மறுபுறம் புலிகளினால் உயர்தரமான நிலையில் பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள் இப்பொழுது இராணுவ முகாம்களாக மாற்றியுள்ளன எனவும் அறியமுடிந்தது. இங்கிருந்து அருகாமையிலேயே இருந்த நண்பரின் வீட்டுக்கு நடந்தே சென்றேன்...

இன்றைய பொழுதில் கிடைத்த அனுபவங்கள் தகவல்கள் கதைகள் மனதில் பெரும் சுமையாக இருக்க... இரவு உணவை உட்கொண்டு... உரையாடிவிட்டு உறங்கச் சென்றோம்.

நண்பரின் வீட்டின் முன்னறையில் நான் தங்கியிருந்தேன். இந்த அறை வீட்டுடன் இணைந்திருந்தாலும் தனியறையாகவே இருந்தது. இரவு வெக்கையை தனிக்க காற்று உள்ளே வருவதற்காக ஜன்னல்களை நன்றாக திறந்து விட்டு... மேலதிக காற்றுக்கு காற்றாடியையும் சுழல விட்டுவிட்டு படுத்தேன்.

இரவு... நடுநிசியை கடந்திருக்க வேண்டும்... ஆழ்ந்த நித்திரையில் இருந்தேன்... மின்சாரம் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். அரசாங்கம் தான் நினைத்த நேரத்திற்கு மின்சாரத்தை நிறுத்துவதை வழமையாக கொண்டிருகின்றது...நாய்கள் குரைத்தன... நித்திரை கலைந்தது... இராணுவத்தினர் என் அறை நோக்கி மெதுவாக வந்து கொண்டிருந்தனர்... போன்ற உணர்வு... பிரமை... என்னை ஆட்கொண்டது... என் உடல் வியர்த்தது; உடல் நடுக்கம் எடுத்தது... கண்களைத் திறந்து ஜன்னல் பக்கமாக பார்க்கும் தைரியம் வரவில்லை... நடப்பது நடக்கட்டும் என ஜன்னலுக்கு முதுகைக் காட்டியபடியே கூனிக் குறுகிப் படுத்திருந்தேன்... அவர்களது குரல்கள் உயர்ந்து தாழ்ந்து மறைந்து போயின...

சிறிது நேரத்தில்...நாய்கள் குரைப்பது நின்றது... ஆனால் வேறு குரல்கள் புதிதாக ஒலித்தன... சில பெண் போராளிகள்...ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு... "எங்களை விட்டு ஏன் சென்றீர்கள்...!" எனக் கதறி அழுதுகொண்டிருந்தார்கள்... அதில் இசைப்பிரியாவும் அவளது தோழிகளும் நின்று கொண்டிருப்பதுபோல் என் கனவு... மனதில் காட்சிகளாக அவர்கள் தெரிந்தனர்...

அவர்கள் முகம் பார்க்காமல்... பார்க்க முடியாமல்... குற்றவுணர்வில் நானும் அழுதேன்.

எங்களை மன்னிப்பீர்களா என அவர்களைப் பார்த்துக் கேட்க முடியவில்லை...

அவர்கள் காத்திருக்கின்றனர்... நம் வருகைக்காக...

அவர்களின் ஆன்மா சாந்தியடைவற்காக...

**மீராபாரதி**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை திருப்திப்படுத்தவே இங்கு தேர்தல் நடத்தப்படுகின்றது

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் கவனத்தை திசை திருப்பும் நோக்கிலேயே தேர்தல் நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திற்காக தேர்தல்களை அரசாங்கம் முன்கூட்டியே நடத்துவது சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கிலேயாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகளுக்கு பதிலளிக்கக் கூடிய சந்தர்ப்பமாக இந்தத் தேர்தலை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகள், விரயம் காரணமாக அரச நிர்வாகத்துறையில் பாரியளவு முறைகேடுகள் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்வி, மின்சாரம், சுகாதாரம், விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் பாரியளவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் பாராளுமன்றத் தேர்தலில் கூட அரசாங்கத்தை தோற்கடிக்கும் வல்லமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக அரசாங்க ஊடகங்கள் போலிப் பிரசாரம் மேற்கொண்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவி வரும் முரண்பாடுகளை பயன்படுத்தி தேர்தலில் வெற்றியீட்ட அரசாங்கம் முயற்சித்துவருவதாகவும் இந்த முயற்சி வெற்றியளிக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

# துமிந்தவின் வாக்குமூலம் சர்ச்சையை ஏற்படுத்துகிறது

## அவர் சரணடைவது வரவேற்கத்தக்கது- ஹிருனிகா

தமக்கு எதுவும் நினைவில்லை என்ற துமிந்த சில்வாவின் வாக்குமூலம் சர்ச்சையை ஏற்படுத்துகிறது என ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கு தொடர்பிலான விசாரணைகளில் கலந்து கொண்டபோது அவரது மகள் ஹிருனிகா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தமக்கு எதுவும் நினைக்கவில்லை என குறிப்பிடுகின்றார். இந்த நிலையில் வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதில் சர்ச்சை ஏற்படும்.

எவ்வாறெனினும் நாடு திரும்பியவுடன் சரணடைவதாக வெளியிட்டுள்ள கருத்து வரவேற்கப்பட வேண்டியது என ஹிருனிகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நாடு திரும்பியவுடன் பொலிஸாரிடம் சரணடைவார் என அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

துமிந்த சில்வா நாடு திரும்புவதற்கு இன்னும் ஒரு சில மாதங்கள் செல்லும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ந-2)

# லலித், குகனை இராணுவத்தினர் விடுதலை செய்ய வேண்டும்!

## ம.உ.பணியாளர்கள் வலியுறுத்தல்

யாழ்ப்பாண மனித உரிமை செயற்பாட்டாளர்களான குகன் மற்றும் லலித் ஆகியோரை உடனடியாக இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் பணியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மனிதாபிமான தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அஜித் குமார நேற்று முன்தினம் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் குறித்த இருவரும் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நாளாந்தம் துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தங்களது வாழ்விடத்தில் மனித உரிமைகளை நிலைநாட்ட செயற்பட்டதாலேயே கைது செய்யப்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்த நிலையில் அவர்கள் இருவரையும் உடனடியாக இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும் லலித் மற்றும் குகன் விவகாரத்திற்கும் இராணுவத்தினருக்கும் தொடர்புகள் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார். (ந-2)

# சமுர்த்தி கொடுப்பனவுகளை இரத்துச் செய்ய அரசு திட்டம்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு


சமுர்த்தி திட்டக்கொடுப்பனவுகளை இல்லாதொழிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

திவிநெகும என்னும் திட்டத்தின் கீழ் 900 மில்லியன் ரூபா சமுர்த்தி கொடுப்பனவை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனால் திவிநெகும திட்டத்தின் மூலம் சமுர்த்தி பயனாளிகளும் பலர் பாரியளவில் பாதிக்கப்படுவர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே சமுர்த்தி கொடுப்பனவை இரத்து செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றார். மேலும் திவிநெகும திட்டத்தின் பிரசாரப்பணிகளுக்காக இதுவரையில் 36 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ந-2)




கொமர்ஷல் வங்கி வவுனியா கிளையின் ஏற்பாட்டில் கடந்த 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா அண்மையில் வங்கியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுடன் பாராட்டுப்பெற்ற மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# நூதனசாலை கொள்ளைக்கைது ஒரு ஜோடிக்கப்பட்ட பொய்க்கதை!

## சோபிததேரர் நகைப்பு

(கொழும்பு)

தேசிய அருங்காட்சியக கொள்ளை தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட சம்பவமானது ஓர் ஜோடிக்கப்பட்ட பொய்க்கதை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அருங்காட்சியத்தில் விலைமதிப்பற்ற பொருட்களை கொள்ளையிட்ட நபர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் போதைப்பொருள் பயன்படுத்துவோரை கைது செய்தமை நகைப்பிற்குரியது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தேசிய அருங்காட்சியக கட்டடத்திற்குள் பிரவேசித்து மிகவும் சிக்கல் மிக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை ஊடறுத்து பொருட்களை கொள்ளையிட போதைப்பொருள் பாவனையாளர்களினால் முடியாது.

லலித் அத்துலத் முதலி படுகொலையின் போது தேசிய அடையாள அட்டையை ஆடையில் வைத்திருந்த சடலமொன்று குற்றவாளியாக்கப்பட்டது.

அரசியல்வாதி ஒருவரின் காணாமற்போன பொருளைத் தேடுவது தொடர்பில் காட்டும் அக்கறை கூட தேசிய சொத்து ஒன்று களவாடப்பட்டமை தொடர்பில் பொலிஸார் காட்டத் தவறியுள்ளனர். அருங்காட்சியக கொள்ளைச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக தலையீடு செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-2)

# பங்குச் சந்தை மோசடி குறித்து முன்னாள் தலைவரிடம் விசாரணை

## ஐ.தே.கவின் யோசனையை சபாநாயகர் ஏற்பு

(கொழும்பு)

முன்னாள் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர் திலக் கருணாரட்னவை கோப் குழுவின் முன்னிலையில் அழைத்து விசாரணை நடத்தும் யோசனைக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆதரவு தெரிவித்துள்ளார்.

திலக் கருணாரட்னவை அழைத்து பங்குச் சந்தை மோசடிகள் தொடர்பில் தகவல்களை அறிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியிருந்தது. இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அழுத்தம் காரணமாக பதவி விலகுவதாகத் தெரிவித்து அண்மையில் திலக்கருணாரட்ன பதவியை இராஜினாமா செய்திருந்தார். சர்ச்சைக்குரிய கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பில் பாராளுமன்ற பொது முயற்சியாண்மைக்குழு (கோப்) நடத்தி வரும் விசாரணைகளுக்கு கருணாரட்னவின் தகவல்கள் அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பிரேரணை ஒன்றை நிறைவேற்ற கருணாரட்னவை பாராளுமன்றிற்கு அழைக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இந்த யோசனையை ஏற்றுக் கொள்வதாகவும் எனினும் பிரேரணை சமர்ப்பிக்க இது உசிதமான நேரமல்ல எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ந-2)

# மற்றொருவரும் கைதாம்!

கொழும்பு தேசிய நூதனசாலை கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவரிடமிருந்து கொழும்பு தேசிய நூதனசாலை கொள்ளையின்போது காணாமற்போன புராதன பொருள் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் கீழ் விசாரணைக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அஜித் ரோஹன மேலும் தெரிவித்தார்.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் முன்னதாக கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடாமுயற்சியும் மன உறுதியும்...


அழகான மலைகள் சூழ்ந்த கிராமம். மலைகளின் ஊடாக சலசலவென பாய்ந்து ஓடும் ஆற்றின் கரையோரத்தில் இரண்டு குருவிகள் ஒரு மரத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

ஒரு சமயம் பெண் குருவி மூன்று முட்டைகள் இட்டது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் எப்போது வெளியேவரும் என எண்ணிக் குருவிகள் இரண்டும் ஆவலாகக் காத்திருந்தன.

ஒருநாள் ஆற்றில் நீரோட்டம் அதிகமாக இருந்தது. ஆற்றில் அலை உயர்ந்து கொண்டேயிருந்தது. காற்றும் வேகமாக வீசிக் கொண்டிருந்தது. அப்போது ஓர் அலை மேலெழுந்து குருவிகளின் கூட்டையும் அதோடு சேர்த்து உள்ளிருந்த முட்டைகளையும் ஆற்றுக்குள் தூக்கிப்போட்டது.

ஆற்று வெள்ளத்தில் முட்டைகள் அடித்துச் செல்லப்பட்டன. இதை சற்றும் எதிர்பாராத குருவிகள் இரண்டும் மனம் வருந்தி அலறின. ஆற்று தேவதையை நோக்கிப் பிரார்த்தனை செய்தன.

எனினும் ஆற்றுதேவதை அவைகளின் பிரார்த்தனைக்கு செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. மனம்



வருந்திய குருவிகள் தங்களது சிறிய அலகுகளால் ஆற்றுநீரை எடுத்துக் கரையில் .கொட்டிக்கொண்டிருந்தன. இப்படியே நாட்கள் பல சென்றன.

ஒருநாள் அவ்வழியே வந்த நாரதர் குருவிகளே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார். குருவிகள் நடந்ததை விளக்கிக் கூறின. குருவிகள் கூறிய கதையைக் கேட்ட நாரதர் சிரித்துக் கொண்டே நீங்கள் செய்யும் இந்த முயற்சி வீண். ஒருநாளும் ஆற்று நீர் முழுவதையும் உங்களால் எடுத்துவிட முடியாது என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் கூறியதை எண்ணி மனம் வருந்தாமல் தாங்கள் செய்து கொண்டிருந்த பணியைத் தொடர்ந்து செய்தன அந்தக் குருவிகள்.

எத்தனை நாட்கள் தொடர்ந்து செய்தாலும் ஆற்றுநீர் குறைந்த பாடில்லை. திடீரென்று ஒருநாள் ஆற்றின் நடுவே ஒரு அழகிய தேவதை தோன்றினார்.

தேவதையின் முகத்தில் புன்னகை. தேவதை பரிவுடன் குருவிகளிடம் குருவிகளே நான்தான் ஆற்று தேவதை இதோ பெற்றுக் கொள்ளுங்கள் உங்களது முட்டைகளையும் கூட்டையும்.

நான் இதை உங்களிடம் ஒப்படைப்பதற்குக் காரணம் நாரதர் உங்களை எள்ளி நகையாடினாலும் நீங்கள் விடாமுயற்சியுடனும் மன உறுதியுடனும் உங்களது பணியைத் தொடர்ந்து செய்ததுதான் என்று கூறி விட்டு முட்டைகளையும் கூட்டையும் ஒப்படைத்து விட்டு மறைந்து போனார்.

இதுபோலத்தான் கல்வியெனும் கரையினைக் கடக்க விடா முயற்சியும் மனஉறுதியும் தேவை.

# கிடைத்ததில் சமபங்கு

ஒருநாள் கிருஷ்ணதேவர் அரண்மனையில் கிருஷ்ணலீலா நாடக நாட்டியம் நடைபெற ஏற்பாடு செய்திருந்தார்.

தெனாலிராமனைத் தவிர ஏனைய சகல முக்கிய பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசியும் மற்றும் சில பெண்களும் கலந்து கொள்வதால் தெனாலிராமன் இருந்தால் ஏதாவது கோமாளித்தனம் செய்து நிகழ்ச்சியை நடைபெறாவண்ணம் தடுத்து விடுவான் என எண்ணி தெனாலிராமனை மட்டும் நாடக அரங்கினுள் விடவேண்டாமென்று வாயிற்காப்போனிடம் கண்டிப்புடன் சொல்லிவிட்டார் மன்னர்.

இதை அறிந்தான் தெனாலிராமன். எப்படியாவது அரங்கத்தினுள் சென்றுவிடுவது என தீர்மானித்துக்கொண்டான்.

நாடகம் நடைபெறும் அரங்கின் வாயிலை நெருங்கினான் தெனாலிராமன். உள்ளே செல்ல முற்பட்டான்.

வாயிற்காப்போனோ அவனை உள்ள விட மறுத்து விட்டான். மீண்டும் மீண்டும் கெஞ்சினான் வாயிற்காப்போன் மசியவில்லை.

இந்நிலையில் தெனாலிராமன் ஒரு தந்திரம் செய்தான்.

ஐயா வாயிற்காப்போரே என்னை உள்ளே விட்டால் என்னுடைய திறமையால் ஏராளமான பரிசு கிடைக்கும்.

அதில் பாதியை உனக்குத் தருகிறேன் என்றான். இதைக்கேட்ட வாயிற்காப்போன் முதலில் சம்மதிக்காவிட்டாலும் பின்னர் கிடைப்பதில் பாதி பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து அவனை உள்ளே விட்டான்.

அரங்கத்தினுள் செல்ல வேண்டுமானால் மீண்டும் இன்னொரு வாயிற்காப்போனை சமாளிக்க வேண்டியிருந்தது. அவனும் தெனாலிராமனை உள்ளே விட மறுத்தான்.

முதற் வாயிற்காப்போனிடம் சொல்லியதையே இவனிடமும் சொன்னான். இவனும் பாதி பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து அவனை உள்ளே விட்டுவிட்டான்.

ஒருவருக்கும் தெரியாமல் தெனாலிராமன் ஓர் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அப்போது கிருஷ்ணனாக நடித்தவன் வெண்ணெய் திருடி கோபிதைகளிடம் அடிவாங்கும் காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

உடனே மூலையில் இருந்த தெனாலிராமன் பெண்வேடம் அணிந்து மேடையில் தோன்றி கிருஷ்ணன் வேடம்போட்டு நடித்தவனை கழியால் நையப்புடைத்து விட்டான். கிருஷ்ணவேடதாரி வலி பொறுக்கமாட்டாமல் அலறினான்.

இதைப்பார்த்த மன்னர் கடுங் கோபமுற்று மேடையில் பெண் வேடமிட்டுள்ள தெனாலிராமனை அழைத்து வரச்செய்தார். பின் ஏன் இவ்வாறு செய்தாய் என வினவினார்.

அதற்குத் தெனாலிராமன் கிருஷ்ணன் கோபிகைகளிடம் எத்தனையோ மத்தடி பட்டிருக்கிறான்.

இப்படியா இவன்போல் அவன் அலறினான். இதைக்கேட்ட மன்னருக்கு அடங்காகக் கோபம் ஏற்பட்டது.

தெனாலிராமனுக்கு 30 கசையடி கொடுக்குமாறு தன் பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

இதைக்கேட்ட தெனாலிராமன் அரசே இப்பரிசை எனக்கு கொடுக்க வேண்டாம்.

ஏனென்றால் எனக்குக் கிடைக்கும் பரிசை ஆளுக்குப் பாதிப்பாதி தருவதாக நம் இரண்டு வாயிற்காப்போன்களிடம் உறுதியளித்து விட்டேன்.

ஆகையால் இப்பரிசினை அவர்கள் இருவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

உடனே மன்னர் அவ்விரு வாயிற்காப்போன்களையும் அழைத்து வரச்செய்து இது குறித்து விசாரித்தார்.

அவ்விருவரும் உண்மையை ஒத்துக்கொண்டார்கள். அவ்விருவருக்கும் தலா 15 கசையடி கொடுக்குமாறு மன்னர் பணித்தார்.

மேலும் தெனாலிராமனின் தந்திரத்தைப் பாராட்டி அவனுக்குப் பரிசு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழக்கனவு வீழ்த்தப்பட்டது உலக நாடுகள் துணையோடுதான்!

## மதத்தைக் காக்கத் துடித்த நாம் இனத்தைக் காக்க துடிக்கவில்லை-சீமான்

உலக நாடுகளின் துணையோடு எங்கள் ஈழக்கனவு வீழ்த்தப்பட்டது. வன்னி மண்ணில் கடந்த மூன்று வருடங்களாக முள்வேலியில் வாயில்லாப்பூச்சிகளாக இருப்பவர்களுக்காக ஏன் ஒருவரும் குரல் கொடுக்கவில்லை? இந்நிலையில்தான் கருணாநிதி டெசோ மாநாடு நடத்தியுள்ளார். இந்த மாநாடு அவர்களின் காயத்திற்கு மருந்து போடும் என்கிறார். அப்படிச் சொல்பவர் கடந்த மூன்று வருடங்களாக என்ன செய்து கொண்டிருந்தார்? என நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் பொங்கித் தீர்த்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் சார்பில் தீரன் சின்னமலை நினைவேந்தல் பொதுக்கூட்டம் திருப்பூரில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்று உரை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், ஆடு, மாடுகளைக்கூட ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கட்டிப்போட்டால் தட்டிக்கேட்க ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் மூன்று வருடங்களாக பொட்டல் காட்டில் கொளுத்தும் வெயிலில் கொட்டும் மழையில் முள்வேலியில் வாயில்லாப்பூச்சிகளாக இருப்பவர்களுக்காக ஏன் ஒருவரும் குரல் கொடுக்கவில்லை? அவர்களைக் காயப்படுத்தியது யார்? மூன்று வருடங்களாக ஒருவனுக்கு காயம் இருந்தால் அவன் சீழ் பிடித்து இறந்து விடுவானே. புலிகள் மீதான தடையை நீக்கும் வரை ஈழமக்களுக்கு தீர்வு இல்லை.

காந்தியைக் கொன்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்குக் கூட 16 மாதங்களுக்குமேல் தடைபோடவில்லை. ஆனால், ராஜீவ்காந்தியைக் கொன்றதாகச்சொல்லி விடுதலைப் புலிகளுக்கு 21 ஆண்டுகளாக தடை இருக்கிறது. அகதியாக வரும் நான்கு வயது சிறுவன் கூட கைது செய்யப்படுகிறான்.டெசோ மாநாடு நடத்தத் துடிக்கும் கலைஞர் அன்று அவுஸ்திரேலியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு அகதிகளாகப் போக தத்தளித்த மக்களுக்காக ஏன் குரல் கொடுக்கவில்லை? சிறிதுசிறிதாக சேமித்து முள்ளிவாய்க்கால் மக்களின் மருத்துவத்தேவைக்காக அனுப்பிய இரத்தப்பொட்டலங்களை ஜாஃவர் சேட் என்ற பொலிஸ் அதிகாரி காலால் மிதித்த போது தடுக்கவில்லையே ஏன்? இப்போது நீங்கள் போடப்போவதாகச் சொல்லும் தீர்மானத்தை ஏன் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் சட்டமன்றத்தில் போடவில்லை? காரணம் தமிழன் இழிச்சவாயன். தமிழனின் வீழ்ச்சிக்குக் காரணம் நமக்குள் இருக்கும் சாதி மதம் துரோகம்தான். மதத்தைக் காக்கத் துடித்த நாம் இனத்தைக்காக்க துடிக்கவில்லையென்று முடித்தார் சீமான்.

(ந-2)

## காட்டுத் தீ குறித்து எண்மர் குழு அறிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் காட்டுத் தீயை கட்டுப்படுத்துவது குறித்து விபரமான அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 8 பேர் கொண்ட குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சுற்றாடல் துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, காணி மறுசீரமைப்பு அமைச்சு, பொதுநிர்வாக அமைச்சு, விவசாய சேவைகள் அமைச்சு, வன ஜீவராசிகள் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் இக்குழுவில்அங்கம் வகிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களில் காட்டுத் தீயினால் சுமார் 200 ஏக்கர் பரப்பளவிலான காடுகள், புற்தரைகள், பாதுகாக்கப்பட்ட வனங்கள் அழிந்துள்ளன.

மொனராகலை, பதுளை, கண்டி, மாத்தளையில் பாரிய காட்டுத் தீ பரவியிருந்தது. அதேவேளை, அநுராதபுரம், ஹப்புத்தளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் காட்டுத்தீ ஏற்பட்டிருந்தது.

(ந-2)

## நுரைச்சோலை அனல்மின் நிலையம் 12 தடவைகள் பழுதடைந்துள்ளது

சீன நிதியுதவியுடன் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனல்மின் நிலையம், இயங்க ஆரம்பித்ததில் இருந்து 12 தடவைகள் பழுதடைந்திருப்பதாக மின்சாரத்துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியினர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அனல் மின்நிலையம் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இயங்க ஆரம்பித்தது. இந்தக் காலப்பகுதியில் மாத்திரம் 12 தடவைகள் பழுதடைந்துள்ளது.

இதேவேளை ஏனைய மின்னுற்பத்தி நிலையங்களைவிட இந்த மின்னுற்பத்தி நிலையத்தில் ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய குறைந்த செலவே செல்கிறது. எவ்வாறாயினும் தொடர்ச்சியாக இந்த மின் உற்பத்தி நிலையம் பழுதடைந்து வரும் நிலையில், இது குறித்து ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குழுவின் அறிக்கை அடிப்படையிலேயே நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மின்னுற்பத்தி நிலையில் சுமார் 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ந-2)

## கூட்டமைப்பு வேட்பாளர் மீது மட்டக்களப்பில் தாக்குதல்!

### யோகேஸ்வரன் எம்.பி. கண்டனம்

மட்டக்களப்பு கல்குடா தொகுதியில் உள்ள கல்மடு ஜீவநகர் பகுதியில் நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வாகரைப் பிரதேசத்தின் வேட்பாளரான ப. சிவநேசனின் ஆதரவாளர் குழு மீது கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனின் குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வன்மையாக கண்டித்துள்ளதுடன் இவ்விடயமாக உடனடி நடவடிக்கையை மேற்கொண்டு சட்டத்தின் முன் தாக்குதல் புரிந்தவர்களை நிறுத்துமாறும் பாதுகாப்பு தரப்பினரைக் கேட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தேர்தல் பிரசாரத்தின் நிமிர்த்தம் கடமையில் ஈடுபட்டிருந்த வேட்பாளர் சிவநேசனின் குழுவினர் மீது, இரண்டு மோட்டார் வாகனங்களில் வருகை தந்த மூவரில் ஒருவர் திரவம் நிரப்பப்பட்ட போத்தலால் வேட்பாளர் ப.சிவநேசன் ஆதரவாளரான லோ. சிவராஜன் மீது வீசியுள்ளார்.

இதனால் இவர் நெற்றியில் படுகாயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வேளை அடுத்து வீசப்பட ஒருவகை பதார்த்தம் நிரப்பப்பட்ட மின்குமிழ் போன்ற பொருளால் வேட்பாளர் சிவநேசனின் வாகனத்தில் வீசப்பட்டு முன் கண்ணாடி முற்றாக சேதமாக்கப்பட்டு, அதன் சாரதிக்கு சில நேரம் மயக்கமுறும் நிலை உருவாகியது.

இந்நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் உடன்பிறந்த சகோதரரான சிவநேசதுரை அகிலா என்பவரும், அவருடன் வருகைதந்த பேத்தாழையைச் சேர்ந்த சாந்தலிங்கம் என்பவரும் அவர்களோடு இருந்த இன்னுமொரு நபருமென தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அறிந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான சீ.யோகேஸ்வரன் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் அதன் பின் கல்குடா பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இத்தாக்குதல் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டு சட்டத்தின்முன் குற்றவாளிகளை நிறுத்துமாறு பொலிசாரிடம் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இத்தேர்தலில் ஜனநாயகத்தன்மை பாதுகாக்கப்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளதாக பாராளுமன்ற உறுப் பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ந-2)

## பயண எச்சரிக்கையில் மாற்றம் செய்யுங்கள்

### பிரித்தானியாவிடம் பீரிஸ் கோரிக்கை

பிரித்தானிய பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் விடுத்த பயண எச்சரிக்கை தொடர்பாக பிரித்தானிய உயர் ஸ்தானிகருடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கலந்துரையாடியுள்ளார்.

இவ்விடயம் குறித்து கலந்துரையாடிய அமைச்சு,

வடபகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு ஏற்ப மேற்படி பயண எச்சரிக்கையில் மாற்றம் செய்யுமாறு கோரினால் நாட்டில் ஸ்திரத்தன்மையும் பாதுகாப்பும் ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி எச்சரிக்கையை நியாயப்படுத்த முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் அதிக இராணுவ பிரசன்னம் காணப்படுவதாகவும் பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளதாகவும் மேற்படி பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நாட்டில் பாலியல் வன்முறைகள் அதிகரித்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசியல் கூட்டங்கள் வன்முறைகளாக மாறுவது குறித்தும் எச்சரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-2)



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் கிறிஸ்தவ மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் வணபிதா கலாநிதி. இராயப்பு ஜோசப் ஆண்டகை மங்கல விளக்கேற்றுவதையும், கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க. பேர்ணாட் சிறப்புரையாற்றுவதையும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீனவர் தாக்குதல் பிரச்சினைக்கு கூட்டு இயக்கம் அவசியம்

## ஜெயாவும் ஆதரவு–தா.பாண்டியன்

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கூட்டு இயக்கம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முதல்வர் ஜெயலிலதா ஏற்றுக் கொண்டதாக இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன் தினம் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து பேசியுள்ளார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளும், கொள்கைகளும் தமிழக மக்களுக்கு எதிராகவே உள்ளது. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். சிலர் கொல்லப்படுகின்றனர்.

இதனைத் தடுக்க மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசுக்கு நாம் கடிதம் எழுதுவதும், அவர்கள் வருத்தம் தெரிவிப்பதும்தான் நடக்கிறது.

இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்தியப் பிரதமர் வாதாடுவதைத்தான் பார்க்க முடிகிறது. இந்த நிலையில் தமிழக மக்களின் உயிரைக் காப்பாற்றுவது குறித்து முதல்வருடன் பேசினேன்.

மத்திய அரசின் கவனத்தை ஈர்க்க கூட்டாக இயக்கம் நடத்த அறைகூவல் விடுக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதாவிடம் வேண்டுகோள் விடுத்தேன். கட்டாயம் அதனைச் செய்ய வேண்டும். எங்கள் கட்சியின் மூலம் விரைவில் நடவடிக்கை எடுக்கிறோம்.

எல்லோரும் இணைந்து அந்த இயக்கத்தை நடத்தலாம் என முதல்வர் தெரிவித்தார் என்றார் தா.பாண்டியன்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுக்கு அக்கறை இல்லை என தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் மீனவர் பிரச்சினைக்காக கூட்டு இயக்கம் நடத்த முதல்வர் உறுதி அளித்ததாக தா.பாண்டியன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-2)


# பதவி வெற்றிடம்

- கணக்காளர் (இருபாலாரும்)
- அலுவலக செய்தியாளர் மற்றும் பயிலுநர்கள் (இருபாலாரும்)
- கணனி தமிழ் தட்டச்சு தெரிந்தவர்கள் மற்றும் பயிலுநர்கள் (பெண்கள்)
- ஒப் செட் இயந்திரம் இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)
- களஞ்சிய காப்பாளர் (ஆண்கள்)

பொருத்தமான தகுதியுடையவர்கள் தாம் தெரிவு செய்யும் பதவியைக் குறிப்பிட்டு சுய விபரம் அடங்கிய விண்ணபப்படிவத்தில் தொலைபேசி இலக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு 25.08.2012 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 7Km தூரத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மனிதவள முகாமையாளர்,
வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


# கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை பல்கலை ஆசிரியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றாததைக் கண்டித்து, மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று வியாழக்கிழமை நடத்துவதற்கு நாட்டின் சகல பல்கலைக்கழகங்களும் 80 தொழிற்சங்கங்களும் பல சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து தீர்மானித்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் கொழும்பு நகரின் 3 முக்கிய இடங்களிலிருந்து மாலை 3 மணிக்கு ஆரம்பித்து ஹைட்பார்க் நோக்கிசெல்லும். மொறட்டுவ,றுகுணு,கொழும்பு, கட்புல கலைமகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஊர்வலங்கள் விகாரமாதேவி பூங்காவூடாக தர்மபால மாவத்தையூடாக செல்லும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6 சத விகிதத்தை கல்விக்கு செலவழிக்க வேண்டும். கல்வியை அரசியல் மயப்படுத்துவதையும் நிறுத்த வேண்டும். கல்விக் கொள்கைகளை எழுந்தமானமாக அன்றி, கல்வியாளரின் ஆலோசனையுடன் வகுக்க வேண்டும் என்பன பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் ஆகும்.

நாம் தோல்வி அடையமாட்டோம். எமது கோரிக்கைகளை நாம் வென்றெடுப்பது நிச்சயம். ஆனால், இது எப்போதும் நடக்கும் என்பது அரசாங்கத்தை பொறுத்தது என பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளன உபதலைவர் தம்பர அமில தேரர் கூறினார்.

எமது சம்பளத் தினத்தில் எமக்கு சம்பளம் கிடைக்காவிட்டால் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடுவோம் என அவர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் நாம் முன்னெப்போதையும்விட இப்போது வேலை நிறுத்தத்தை தொடர்வதில் உறுதியாகவுள்ளோம் என சம்மேளனத்தின் தலைவர் நிமல்தேவசிறி கூறினார். (ந-2)

# பிரதியமைச்சரின் கொடும்பாவி ஏறாவூரில் எரிக்கப்பட்டது!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும் பிரதியமைச்சருமான பஷிர் சேகுதாவூத்தின் கொடும்பாவி ஏறாவூரில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதிருப்தி குழுவொன்றினால் எரிக்கப்பட்டிருப்பதாக கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் யூ.எல். எம். முகைதீன் பாவா தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் பிரதேசத்தில் சமூக ஒற்றுமை ஏற்பட வேண்டுமென ஆதங்கத்தின் வெளிப்பாடாக ஏறாவூர் அரசியல்கட்சிகளின் சின்னங்கள் எதனையும் காட்சிப்படுத்தாமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் பஷிர் சேகுதாவூத் சுமார் 3 மணித்தியாலங்கள் உரை ஒன்றினை நிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கடந்த கால வரலாற்றினை கூறினார். எதிர்வருகின்ற மாகாண சபைத்தேர்தலின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதோடு, வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிக்கும் காத்தான்குடி, கல்குடா தொகுதி மக்கள் அலிஸாகிர் மௌலானாவுக்கும் ஒரு விருப்பு வாக்கை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் அலிஸாகிர் மௌலானாவுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீல.மு.கா. கட்சி தவிசாளர் பஷிர் சேகுதாவூத் நடத்திய உரையினைக் கண்டித்து கட்சியின் அதிருப்திக் குழுவினர் இக்கொடும் பாவியை எரித்துள்ளனர். (ந-2)

# பேச்சுவார்த்தைக்கு தயார்; ஆனால் அரசின் பொறிகளில் சிக்கமாட்டோம்

## பல்கலை. விரிவுரையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருப்பதாகவும் எனினும் பொறிகளில் சிக்கிக் கொள்ள தயாரில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் தேவை அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது சேவைப் புறக்கணிப்பு தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்துவதற்காக கொழும்பு தேசிய நூலகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப் பிட்டுள்ளார்.

ஊதியத்தை வழங்காது விரிவுரையாளர்களை பணிக்கு அழைத்துக் கொள்வதே உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் தேவையாக உள்ளது. விரிவுரையாளர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாக ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம் அதற்கு உரிய தீர்வுகளை முன்வைப்பதில்லை.

கடந்த மாதம் விரிவுரையாளர்கள் ஊதியத்தைப் பெற முடியவில்லை. இந்த மாதமும் ஊதியம் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறான சிரமங்களையே உயர் கல்வி அமைச்சர் ஏற்படுத்தி வருகிறார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் சிறப்பாக நடைபெறுகின்ற போதிலும் விரிவான விடயங்கள் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படுகிறதே தவிர உரிய தீர்வுகள் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)


# அறிவித்தல்

205 H, ராஜா தியேட்டர் பில்டிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அக்ஷயா கவறிங் வியாபார நிலையம் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு தற்காலிகமாக மூடப்பட்டதனால் எமது வாடிக்கை யாளருக்கு ஏற்பட்ட தடங்கலுக்கு மனம் வருந்துவதோடு வாடிக்கையாளர் நலன்கருதி எதிர்வரும் (24.08.2012) வெள்ளிக் கிழமை தொடக்கம் மீண்டும் வழமைபோல் திறக்கப்படும் என்பதுடன் எமது நல்லூர்க் கிளையும் வழமைபோல் திறக்கப்படும் என்பதனையும் எமது வாடிக்கை யாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். நல்லூர் கிளையில் கவறிங்நகைகளை கொள்வனவு செய்து தங்க நாணயங்கள் பெற்ற வாடிக்கையாளர்கள்.

1 ஆம் பரிசு - ராவிட் (சிறுப்பிட்டி)
2 ஆம் பரிசு - மதன்குமார் (கல்வியங்காடு)
3 ஆம் பரிசு - அகஸ்திகா (நெல்லியடி)

மேலும் 10 ஆறுதல் பரிசில்கள் பெற்றவர்களின் விபரம்

தமிழரசி, அபிஷா, பாலசுப்பிரமணியம், அபிவர்ணா, தேவா, வித்தகன், சறோஜினி, மதிவதனி, கோபுசங்கர், சண்முகம்.



அக்ஷயா கவறிங்
205H, ராஜா தியேட்டர் பில்டிங்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
0777073472

[சி 809]


# ஆறு வருட தலைவர் பதவிக்கு நீதிமன்றம் இடைக்கால தடை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி 6 வருடத்திற்கு ஒருமுறை நியமிக்கப்பட வேண்டும் என அக்கட்சியின் மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கான இடைக்கால தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்கிஸ்சை மாவட்ட நீதிமன்றம் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு எதிராக அக்கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன மனுத்தாக்கல் செய்திருந்தார்.

கடந்த ஜுலை 19 ஆம் திகதி இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழு கூட்டத்தில், ஐ.தே.க. தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் என எடுக்கப்பட்ட தீர்மானம் கட்சியின் யாப்புக்கு முரணானது என மைத்திரி குணரத்ன மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையானது புயலுக்கு அஞ்சுவதில்லை.
அறிஞர்கள் அடிமையாக மாட்டார்கள்.
-காரோஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சட்டவிரோதமாக தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது

## இங்கிருந்து போராடலாம் என்கிறார் மனோ

தமிழர்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் தமிழர்கள் சட்டவிரோதமான முறையில் புகலிடம் கோரக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாறாக நாட்டில் இருந்து கொண்டே உரிமைகளுக்காகப் போராட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களைப்போல் அன்றி தற்போது போராடுவதற்கான ஜனநாயக சந்தர்ப்பம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் அச்சுறுத்தல்கள் நிலவி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் இலங்கையில் இருந்து கொண்டே ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தி உரிமைகளை வென்றெடுப்பதன்மூலம் தமிழர்களுக்கு இலங்கையில் நிம்மதியாக வாழக்கூடிய ஓர் பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட வகையில் நிலப்பிரதேசங்களில் தமிழர்களின் எண்ணிக்கை குறைப்பதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக தமக்குத்தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான ஆதாரங்களை தற்போதைக்கு வழங்கமுடியாது எனவும் எதிர்காலத்தில் சான்றுகளுடன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ந-2)

# அரசு-பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தோல்வி யார் பக்கம்?

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் முற்றுப்பெறாத நிலையில், அனைத்து பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீடங்கள் தவிர்ந்த அனைத்துப் பீடங்களையும் மறு அறிவித்தல்வரை மூடிவிடுமாறு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசின் இந்த உத்தரவு எதிர்பார்க்கப்படாத ஒன்று.

தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஏதோவொரு வகையில் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு இது பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

அரசின் இந்த நடவடிக்கையால் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதென்பதற்கு அப்பால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று தலையைப் பிய்த்துக் கொள்ளும் புதிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

சம்பள அதிகரிப்பு வேண்டாம்; நாம் கடமைக்குத் திரும்புகிறோம் எனக் கூறினால், எதிர்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட எந்தக் கோரிக்கையையும் முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் - தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே விட்டுக்கொடுத்தல் என்ற முடிபை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எடுப்பார்கள் என்றும் சொல்லிவிட முடியாது.

அதேநேரம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வுக்கு வருவதாக இருந்தால், விரிவுரையாளர்களின் கோரிக்கையை முழுமையாக ஏற்க முடியாது என ஏற்கெனவே கூறிய அரசு ஒருபடி மேலே சென்று இப்போதைக்கு எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிடும்.

இங்குதான் இரண்டும் கெட்ட நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நிலைமை உள்ளது.

இது இவ்வாறு இருக்க, விரிவுரையாளர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் அரசின் நிலைப்பாடு என்னவென நோக்கினால், விரிவுரையாளர்களின் சம்பள அதிகரிப்பு கோரிக்கையை ஏற்று அதனை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஆனால், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு கட்டுப்பட்டு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றினால் அடுத்த கட்டமாக ஆசிரியர்கள், மருத்துவர்கள் என சகல அரச பணியாளர்களும் சம்பள உயர்வு கேட்டு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதிப்பர்.

எனவே பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை முறியடிப்பதன் மூலமே எதிர்காலத்தில் அரச பணியாளர்களின் வேலைநிறுத்த போராட்டங்களை தடுக்க முடியும்.

ஆக, பல்கலைக்கழகங்கள் இயங்காவிட்டாலும் பரவாயில்லை. மாணவர்கள் கற்காவிட்டாலும் பிரச்சினையில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கையை முறியடித்தாக வேண்டும் என்பதில் அரசு விடாப்பிடியாக இருக்கின்றது.

அதன் விளைவாக பல்கலைக்கழகங்களை காலவரையறையின்றி மூடிவிடுவது என்ற உத்தரவை உயர் கல்வி அமைச்சர் பிறப்பித்துள்ளார்.

விரிவுரையாளர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டத்திற்கு மாணவர்களின் ஆதரவைக் கிடைக்காமல் செய்ததும் அரசின் நோக்கம் என்பதைப் புரிய முடியும்.

எதுவாயினும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஒற்றுமை குலையாமல், ஒரு பகுதியினர் ஊடறுத்து அரசுக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருக்கும் வரையில் யாருக்குத் தோல்வி என்பதை கூறமுடியாமல் இருக்கும்.

# மாட்டிறைச்சி உண்பதை மக்கள் கைவிட வேண்டும்

## அம்பாறை சிவதொண்டர் அமைப்பு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்தில் 15 வருடங்களுக்கு மேலாக மாட்டிறைச்சி உண்பதை மக்கள் கைவிட்டுள்ளனர். இந்த நடைமுறையை யாழ்.மாவட்டத்திலும் கொண்டுவரவேண்டும் என அம்பாறை மாவட்ட சிவதொண்டர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் ஆர்.ரவிச்சந்திரன் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் பசுவதையை தடுப்பதற்கான துண்டுப்பிரசுரங்களை இந்துமகாசபையுடன் இணைந்து சிவதொண்டர் அமைப்பு விநியோகித்து வருகிறது.

இந்த நடவடிக்கையினை நாடளாவிய ரீதியில் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக அங்குள்ள மக்கள் மாட்டிறைச்சியை உண்பதில்லை.

எமது அமைப்பின்மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஊடாக அங்கு மாட்டிறைச்சி கடைகளும் இல்லை. உணவகங்களில் மாட்டிறைச்சி விற்கப்படுவதும் இல்லை. மக்களின் ஆதரவின் மூலம் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

வேறுமதத்தவர்கள், வேறு இனத்தவர்கள் அங்கு வாழ்ந்து வருகின்றபோதும் மாட்டிறைச்சி உண்பதில்லை.

இவ்வாறானதொரு நடைமுறையை ஏன் யாழ். மாவட்டத்தில் கொண்டுவர முடியாது.

இந்து அமைப்புக்கள், இந்து சமய இளைஞர்கள் அதுதொடர்பில் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## சத்திய தரிசனம்



வாழ்க்கை வாழ்வதற்கு தண்ணீர் தேவை. இந்தத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இரண்டு பங்கு ஐதரசனும் ஒரு பங்கு ஒட்சிசனும் சேர்ந்தால் தண்ணீர் உருவாகிறது என்று இந்த இரசாயன முறையில் தண்ணீரை உருவாக்கலாம் எனக் கூறுகின்றனர்.


ஆனால் யார் இந்த ஒட்சிசனையும் ஐதரசனையும் உருவாக்கியது என்று புரிந்து கொள்ளத்தவறி விடுகிறார்கள்.

## வரட்சியால் வாழைமரங்கள் அழிவு

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சி காணப்படுவதனால் அங்குள்ள பல வாழைமரங்கள் அழிவடைந்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் வாழைப்பழங்களின் விலை அங்கு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-3-263)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## திருமணம் செய்யும் போது ஏன் மந்திரக்கோடி வழங்குகின்றனர்?

திருமணம் பல வகையில் நிகழ்கின்றன. ஆனாலும் மந்திரக்கோடி அளித்து திருமணம் செய்து கொள்வதை புடைவைக்கொடை என்றழைக்கின்றனர்.

பழையகாலத்தில் திருமணம் எட்டு வகையிலாயிருந்தது. அதனால் அதை அஷ்டமங்கலம் என்று பெயரிட்டிருந்தனர். பிராமம், தெய்வம், ஆர்ஷம்,பிரஜாபத்யம், காந்தர்வம், ஆசுரம், ராஷசம், பைசாசம் என்று எட்டு வகையில் திருமணம் நிகழ்ந்து வந்தது.

தந்தை தன்மகளை உத்தமமான ஒரு பிரம்மச்சாரிக்குக் கொடுப்பது பிராம விவாகம், யாகம் நிகழும்போது தந்தை மகளை புரோகிதருக்கு அளிக்கும் விவாகச்சடங்கு தெய்வம் எனப்படும். கன்னிப் பெண்ணை மணமகனுக்கு அளித்து பதிலாக இரட்டையை ஏற்று வாங்குவது ஆர்ஷம். செல்வத்துடன் மகளை ஒருவருக்குக் கொடுப்பது பிரஜாபத்திய விவாகம். யாரிடமும் கலந்துகொள்ளாமல் காதலன் காதலியை தனதாக்கிக்கொள்வது காந்தர்வ விவாகம். புராணங்களில் ஏராளம் கதைகளில் காந்தர்வத் திருமணங்களைக் காணலாம். ஒருவர் கன்னிப்பெண்ணை அவள் தந்தைக்கு விலைகொடுத்து ஏற்றுக் கொள்வது ஆசுரம் என்பது. பலவந்தமாக ஒரு கன்னிப்பெண்ணை அபகரித்துக்கொண்டு செல்வது ராஷசம் எல்லாவற்றிலும் இழிவான திருமண முறை பைசாசம்.பெண் தூங்கிக்கொண்டிருக்கும்போதோ அல்லது மயக்கத்திலிருக்கும் போதோ அவளை மனைவியாக்கிக் கொள்வதே பைசாசம். இதற்கு சமூகம் ஒருபோதும் மன்னிப்பளிப்பதில்லை.

இத்தனை வகைத் திருமணங்கள் நம் நாட்டில் இருந்தும் மந்திரக்கோடி அளித்து திருமணம் செய்து கொள்ளும் முறையே பல இடத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வெறும் ஒரு ஆடையாலும் மந்திரக்கோடி என்ற பெயர் பெற்றதும் திருமணப் புடைவைக்கு பரிசுத்தமும் புனிதத்தன்மையும் வந்து சேரும். இதைப் பெண் என்றும் ஒரு நிதியாகப் பாதுகாத்து வருகின்றது. இதனாலேயே ஆத்மீகமாக எவ்வளவு ஞானமிருந்தும் பௌதீகமாக எத்தனை விஷேசங்களிருந்தாலும் திருமணப்புடைவை என்பது பாதுகாப்பின் சின்னம். இதனால் கணவனிடமிருந்து மனைவிக்கு பாதுகாப்புக் கிடைக்கின்றது என்பதே உட்பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





(வேலணை)

கடந்த வாரம் முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் வடமாகாண கடற்கரை கரப் பந்தாட்டம் வடமாகாண விளையாட் டுப்பணிப்பாளர் சி. அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் நா. வேதநாயகம் அவர்கள் கலந்துகொண்டார். வடமாகாண த்தில் முதல் முறையாக அறிமுகப் படுத்தப்பட்ட கடற்கரை கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக்கிண்ணத்தை முல்லைத்தீவு அரச அதிபர் நா. வேத நாயகம் அவர்களும் வடமாகாண விளை யாட்டுப்பணிப்பாளர் சி. அண்ணாத்துரை அவர்களும் வழங்கி கௌரவித்தனர்.

## அளவெட்டி ஞானவைரவரின் விளையாட்டு விழா

அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் 13ம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடாத்தப்படும் மாபெரும் விளை யாட்டுப் போட்டி நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு ஞான வைரவர் விளையாட்டுக் கழக மைதான த்தில் இடம் பெறவுள்ளது.

13ஆம் ஆண்டு நிறைவினை ஒட்டி விசேட விளையாட்டு நிகழ்வில் 50 வயதிற்கு மேற்பட்டோருக்கான வடமாகாண ரீதியி லான சைக்கிள் ஓட்ட நிகழ்வும் அளவெட்டி வாழ் மக்கள் மட்டும் கலந்து கொள்ளும் உள்ளூர் சைக்கிள் ஓட்ட நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள விளையாட்டு நிகழ்வுகளில் தலையணைச் சண்டை, உறியடித்தல், மரதன் ஓட்டம், சங்கீதக் கதிரை, கிடுகுபின்னல், ஆகிய விளையாட்டு நிகழ்வுகளுடன் இன்னும் பல விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இவ் விளையாட்டுக்களில் மரதன் ஓட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இம் மாபெரும் விளையாட்டு போட்டி நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பவர்களை உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இவ் விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணையினை அளவெட்டி வர்த்தர்களும் அளவெட்டி வாழ்மக்களும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்....

## உதைபந்தாட்ட போட்டியில் ஆதிசக்தி அணி வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.


இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய A விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி அணிமோதியது.

இதில் 4:1 என்ற கோல்கணக்கில் ஆதிசக்தி அணி வெற்றி பெற்றது. (3)

## சவால்களை எதிர்கொண்டு விளையாட்டுத்துறையை முன்னேற்றுவோம்.







எவ்வாறான சவால்கள் வந்தாலும் விளையாட்டுத்துறையை விருத்தி செய்ய வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் எடுத்துவரும் முயற்சி பாராட்டுக்குரியது என யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண விளையாட்டு திணைக் களத்தினால் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், மாவட்ட பயிற்சியாளர்கள், விளையாட்டுத்துறை அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் முகமாக காலணிகள், அலுவலகப் பைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலமாக அழிவுகளை எதிர் கொண்ட மாகாணமாக வடமாகாணம் காணப்பட்ட போதிலும் விளையாட்டுத் துறையானது நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் போட்டி போடும் அளவிற்கு தகுதியான துறையாகவுள்ளது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மிகவும் திறமையான வீரர்கள் உள்ளனர். இருப்பினும் உரிய சந்தர்ப்பங்களும் பயிற்சிகளும் போதுமானதாகயில்லை.

விளையாட்டுத்துறையை விருத்திசெய்ய அரசாங்கம் அதிக அக்கறை காட்டுகிறது. கடந்த காலங்களிலிருந்ததை விட தற்போது முன்னேற்றகரமான போக்குள்ளது.

அதிக பணத்தை விளையாட்டுத் துறையை விருத்தி செய்ய அரசாங்கம் செலவழித்துள்ளது என்றார் அவர்.

இதேவேளை வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ஆர். அண்ணாத் துரை உரையாற்றும் போது, நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் போட்டியிடக் கூடிய வகையில் அவற்றுக்கு சவாலாக விளங்கக் கூடிய வகையில் வடக்கு மாகாண விளையாட்டுத் துறையை முன்னேற்ற வேண்டும்.

அதற்கு இங்குள்ள விளையாட் டுத்துறை சார்ந்த அதிகாரி களின் அர்ப் பணிப்பான சேவையும் ஆதரவும் தேவைப் படுகிறது.

தேசிய மட்டங்களில் நடாத்தப்படும் போட்டிகளில் வடக்கு மாகாணம் சார்பாக போட்டியிடும் அணிகள் ஏனைய மாகாணங்களுக்கு சவாலாக விளங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - நியூசிலாந்து முதலாவது டெஸ்ட் இன்று




இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு ஹைதராபாத் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எம்.எஸ்.தோனி தலைமையிலான இந்திய அணியும் ரோஸ் ரெய்லர் தலைமையிலான நியூசிலாந்து அணியும் களமிறங்குகின்றன.

இந்திய அணி தனது சொந்த மண்ணில் களமிறங்குவது சாதகமாக இருந்தாலும் இந்திய அணியின் அனுபவ வீரர்களான ராகுல் ராவிட், வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஆகியோர் அண்மையில் ஓய்வு பெற்றிருப்பது இந்திய அணிக்கு மிகப் பெரும் இழப்பாக காணப்படுகின்றது.

ஆயினும் இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர்களான விராட் ஹோலி, சுரேஷ் ரெய்னா ஆகியோர் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடி வருவது இந்திய அணிக்கு பலமாகக் காணப்படும்.

இந்தியா கடந்த டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்திடம் 4-0 எனவும், அவுஸ்திரேலியாவிடம் 4-0 என்ற ரீதியில் படுதோல்வியடைந்ததால் இம்முறை டெஸ்ட் போட்டியில் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகிறது.

இந்திய டெஸ்ட் அணியின் தலைமைக்கு தோனியா, காம்பீரா என்ற சர்ச்சை சில நாட்களாக காணப்பட்டதனால் இப்போட்டியில் வெற்றிபெறவேண்டிய கட்டாயத்தில் அணித் தலைவர் தோனியும் காணப்படுகின்றார்.

# விருந்தில் தோனியை கழற்றிவிட்டார் லக்ஸ்மன்

இந்தியக் கிரிக்கெட் அணியின் 4ஆவது இன்னிங்ஸ் நாயகன் என்றழைக்கப்படும் மூத்த வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் சமீபத்தில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார்.

நியூசிலாந்துக்கு எதிராக இன்று தொடங்கும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணிக்கு தெரிவு செய்யப்பட்டு இருந்தும் அத் தொடருக்கு முன்பே லக்ஸ்மன் தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டது சர்ச்சையைக் கிளப்பியது.

இந்நிலையில் லக்ஸ்மன், ஹைதராபாத்திலுள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் தனது நண்பர்களுக்கு இரவு விருந்தளித்தார்.

சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக், கௌதம் காம்பீர், சகீர் கான் உள்ளிட்ட மூத்த வீரர்கள் அனைவரும் இந்த விருந்தில் பங்கேற்றனர்.

ஆனால் இந்திய அணித் தலைவரான மகேந்திர சிங் தோனிக்கு இந்த விருந்தில் கலந்துகொள்ளுமாறு லக்ஸ்மன் அழைப்பு விடுக்கவில்லை.

லக்ஸ்மன் அளித்த இரவு விருந்திற்கு உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு தோனி இல்லையென்று பதிலளித்தார்.

தனது ஓய்வு பற்றிப் பேசுவதற்காக அணித் தலைவர் தோனியைத் தான் தொடர்பு கொள்ள முயன்றும் அது முடியாமல் போனதாக லக்ஸ்மன் கூறியிருந்தது பற்றி தோனி ஊடகத்தினரிடம் பேசினார்.

அப்போது நீங்கள் இதனை ஒரு சர்ச்சையாக நினைக்கிறீர்கள். ஆனால் என்னைப் பற்றித் தெரிந்தவர்கள் என்னைத் தொடர்பு கொள்வது சற்றுக் கடினம் என்று என்னிடம்



அடிக்கடி கூறுவதுண்டு.

இதுஒன்றும் புதிதல்ல. இவ்விடயத்தில் என்னை மேம்படுத்திக் கொள்ள நான் பல முறைமுயன்றும் என்னால் அது முடியவில்லை. தனது ஓய்வுபற்றிப் பேசமுயன்ற போது லக்ஸ்மன் என்னைத் தொடார்பு கொள்ள இயலாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம் என்று தோனி கூறினார்.

கடந்த 4 மாதங்களாக தீவிர பயிற்சி செய்து சில உள்ளூர்ப் போட்டிகளிலும் ஆடி நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக சிறந்தமுறையில் தயாராகி இருந்த லக்ஸ்மன், இத்தொடருக்கு முன்னதாகவே திடீரென ஓய்வு பெற்றதால் இந்திய வீரர்களிடையே ஒற்றுமை இல்லையென்பன போன்ற செய்திகள் உலாவுகின்றன.

இந்நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளும் லக்ஸ்மனுக்கு வழங்கப்பட்ட இறுதி வாய்ப்பு என்று தெரிவுக்குழுவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் எச்சரித்ததே அவர் திடீரென ஓய்வுபெறக் காரணம் எனவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சகல ஜனநாயக உரிமைகளையும் வடக்கு மக்கள் அனுபவிக்கின்றனர்

## கோத்தா சாதனைப் பேச்சு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் அதே சமயம் மீண்டும் எழுச்சி பெற வழிவகுத்தல் அரசாங்கத்தின் முன்னாலுள்ள சவாலாகும் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று கூறினார்.

உலக மேடையில் உரிய இடத்தில் இலங்கையை வைப்பதற்காக தேசிய மறுமலர்ச்சி இலங்கையில் இடம்பெற்று வருகின்றது என அவர் கூறினார்.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 5ஆவது வருடாந்த கருத்தரங்கில் பேசிய கோத்தபாய ராஜபக்ஷ அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் வாழும் மக்கள் சகல ஜனநாயக உரிமைகளையும் அனுபவிக்கின்றனர். அரசாங்கம் வழங்கும் சேவைகள் எல்லாம் இவர்களுக்கும் கிடைக்கின்றது.

ஆயினும் இவர்களுக்கிடையிலும் இன அடிப்படையிலான சில காட்சிகளிலும் சில தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பு சக்திகள் உள்ளன என அவர் கூறினார்.

இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் சமாதானத்தைக் குழப்ப இவர்கள் முயல்வர் என அவர் கூறினார்.

இலங்கையர் என்ற வகையில் கடந்த காலத்தை மறந்து நாம் முன்னே போக வேண்டும்.

எங்கள் தேசத்துக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

பாகுபாடு காட்டப்படுமோ என்ற சந்தேகம் ஜனநாயகம் அல்லாத வழிகளில் செல்லவும் பழைய கால பிளவுகளை மீண்டும் தோற்றுவிக்கவும் வழிசெய்யும் ஆதலால் இவ்வாறன சந்தேகங்கள் நீக்கப்பட வேண்டும் என அவர் கூறினார்.

யுத்தம் நடந்தபோது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை அபிவிருத்தி செய்வது பெரும் சவாலாக இருந்தது.

அப்பகுதி மக்களின் ஜனநாயக உரிமைகள் மீட்கப்பட்டமை பெரியதொரு சாதனையாகும் என அவர் கூறினார். (ந-11)

# ஐ.நாவின் பிரதிநிதிகள்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடந்த காலம் முழுவதும் இலங்கை தொடர்பில் எதிர்ப்பான கொள்கையை கடைப்பிடித்து வருகிறார் எனவும், அப்படியானநிலைமையில் அவரையோ அவரது பிரதிநிதிகளையோ நாட்டுக்குள் வர எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது என்ற கடுமையான நிலைப்பாட்டில் தமது கட்சி இருப்பதாகவும் ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிராக அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட காலத்தில், அதனை நிறுத்துவதற்காக யோசனை ஒன்றை நிறைவேற்ற முயற்சித்த பிள்ளை, போர் முடிந்த பின்னரும், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் சர்வதேச பிரிவினைவாதிகளுடன் இணைந்து இலங்கைக்கு எதிராக செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த மார்ச் மாதம் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக யோசனை ஒன்றை கொண்டு வருவதற்காக நவநீதம்பிள்ளை செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்கியதாகவும் வர்ணசிங்க கூறியுள்ளார்.

இவ்வாறு கடந்த காலங்கள் முழுவதும் செயற்பட்ட பிள்ளை மற்றும் அவரது பிரதிநிதிகள் இலங்கை வர இடமளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் நாடு பாரதூரமான பிள் விளைவுகளை சந்திக்க நேரிடும். நாடு மாத்திரமல்ல, ஜனாதிபதி, பாதுகாப்பு செயலர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நடத்திய படைத் தளபதிகளும் அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும்.


இலங்கை போர்க் குற்றம் புரிந்த நாடு என்ற முத்திரையை குத்தி ஜனாதிபதியையும் பாதுகாப்புச் செயலாளரையும் ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதே நவநீதம்பிள்ளை குழுவினரது அடிப்படை நோக்கமாகும். இதற்கு உதவும் வகையில் அரசாங்கத்தில் உள்ள சிலர் செயற்படுவதை ஜாதிக ஹெல உறுமய அனுமதிக்காது எனவும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

எது எப்படி இருந்தபோதிலும் கடந்த 16-ம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் கண்காணிக்க வருவதை அரசாங்கம் எதிர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணையாளரின் பிரதிநிதிகள் குழு இலங்கை வந்து, இலங்கையின் மனித உரிமைகள் சம்பந்தமாக கண்காணிக்க அரசாங்கம் அனுமதிக்கும் எனவும் ரம்புக்வெல கூறியிருந்ததை [illegible] (ந-11)

# இலவசக் கல்வியை பாதுகாக்குமாறு மூத்த பிரஜைகளுக்கு எஸ்.எம்.எஸ்.

## மாணவர்களிடம் ரணில் கோரிக்கை



நாட்டில் இலவச கல்வியை பாதுகாக்குமாறும், அதற்கு ஆதரவளிக்குமாறும் கோரி தமக்குத் தெரிந்த அனைத்து மூத்த பிரஜைகளுக்கும் எஸ்.எம்.எஸ்.அனுப்புமாறு உயர்தர மாணவர்களிடம் எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை இஸட் புள்ளி நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களிடமும் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று மாலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இசட் ஸ்கோர் புள்ளி நெருக்கடி காரணமாக மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தை நோக்கும்போது பரீட்சைகள் திணைக்களம் காணாமல் போயுள்ளது.

எமது பிள்ளைகள் கண்ணீர் சிந்துகிறார்கள்.

கண்ணீர்ப் புகை பிரயோகித்தாலும் இங்கு சிந்துவதற்கு கண்ணீர் இல்லை. அரசாங்கம் இலவசக் கல்வியை கொல்லாமல் கொல்கிறது. இலவசக் கல்வியைக் காப்பாற்ற வீதிக்கு இறங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால்தான் நான் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றேன். இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்கு வீதியில் இறங்குமாறு கோரி உங்களுக்குத் தெரிந்த அனைத்து மூத்த பிரஜைகளுக்கும் எஸ்.எம்.எஸ். அனுப்புங்கள் எனத் தெரிவித்தார்.

# கிளிநொச்சி கிணறொன்றிலிருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் ஒரு தொகுதி ஆயுதங்களை புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் நேற்று மீட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் கிணறு ஒன்றில் இருந்தே மேற்படி ஆயுதங்கள் மீட்கப்பட்டு இருக்கின்றன.

இவற்றில் கலிபர் துப்பாக்கிகளுக்கான ரவைகளும் குண்டுகளும் உள்ளடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.



முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரே இந்த ஆயுதங்களை மீட்டிருக்கின்றனர்.

இந்த ஆயுதங்கள் மீட்புச் சம்பவத்தை அடுத்து குறித்த பகுதியில் பதற்றமான நிலை நேற்று மாலைவரை நீடித்தது. (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (உ/த) பரீட்சை விடைத்...

திருத்துவதற்கான விதிமுறைகளை பரீட்சைத் திணைக்களம் ஏற்படுத்தும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்று கூறியுள்ளார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வினாப்பத்திரங்களுக்கான திருத்தங்கள் சில மாணவர்களுக்கு கிடைக்க வில்லை என அமைச்சர் கூறினார்.

விடைத்தாள்களை நாம் திருத்தும் போது, பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தொடர்பாக நாம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வோம் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தீர்மானம் மேற்கொள்ளும் என அவர் தெரிவித்தார்.

இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், சிங்கள மொழி ஆகிய வினாப்பத்திரங்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், அவற்றில் சிறிய தவறுகள் காணப்பட்டதாக கூறினார்.

532 பாடப்பகுதிகள் தொடர்பாக 52,00,000 வினாப்பத்திர பிரதிகளை நாம் அச்சடிக்கின்றோம்.

இவற்றில் தவறுகள் 0.1 சதவீத மாத்திரமே ஆகும். கேம்பிரிட்ஜ் சர்வதேச பரீட்சை போன்றவற்றிலும் இத்தகைய தவறுகள் ஏற்பட்டமை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளன என அவர் கூறினார். (ந-11)

# இலங்கையை ஓரம்...

ஜேர்மனிக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளதாக இன்னர் சிற்றி பிரஸ் இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த யூலை மாதம் இந்தக் குழுவில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி பாலித கோஹன நியமிக்கப்படவிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதும், தற்போது இந்தக் குழுவின் நியமனம் ஜேர்மனி நாட்டின் ஒரு பிரதிநிதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபைக் குழுக்களால் முதலாவது பாதீட்டுக் குழு இந்தமுறை ஆசிய நாடு ஒன்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தக் குழுவும் இலங்கைக்கு வழங்கப்படாது, இந்தோனேசியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குழுக்களின் நியமன மாற்றங்கள் தொடர்பில் எந்தவித காரணங்களும் இதுவரை வெளியாகவில்லை. (ந-11)

# சிங்கள சாரதியின்...

யாழ்.பஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 4 பிள்ளைகளின் தந்தையாரும் பண்டத்தரிப்பு வடலியடைப்பினைச் சேர்ந்தவரும் காரைநகர் டிப்போவின் ஓய்வு பெற்ற ஊழியருமான நாகலிங்கம் பாலேந்திரன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் ஒன்று மாலை 4 மணிக்கு தனது சேவையினை ஆரம்பிப்பதற்காக பஸ்ஸினை உரிய இடத்தில் விடுவதற்காக திருப்பிக் கொண்டு சென்றுள்ளார்.

பஸ் நிலையத்தின் பின் பக்கத்தில் பஸ் திருப்பப்படும்போது பஸ் சாரதி பின் பக்கத்தினைப் பார்த்துக் கொண்டு முன்பக்கமாகத் திருப்பியுள்ளார்.

இதன்போது எதிரே நின்ற முதியவரினைக் காணாமல் முதியவர் மீது பஸ் மோதியுள்ளது. இது தொடர்பில் சம்பவ இடத்தில் நின்ற பழக்கடை வியாபாரி ஒருவர் விபரிக்கையில்,

குறித்த பஸ் மிக வேகமாகத் திருப்பப்படும் போதே குறித்த பஸ் சில்லினுள் முதியவர் அகப்பட்டுக் கொண்டார் என்றும் பஸ் சில்லு முதியவரின் கால்களில் இருமுறை ஏறியது என்றும் உடனடியாக முதியவருக்கு அங்கு நின்ற சேவை மனப்பாங்குடைய வைத்தியர் ஒருவரின் முதலுதவியினால் அவர் சாரதிப் பயிற்சி வான் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றார்.

மேலும் குறித்த பஸ் சாரதி தலைமறைவாகியதோடு சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உடனடியாக பஸ்ஸினை அகற்ற முயன்றுள்ளனர். இதனால் கொதிப்படைந்த இளைஞர்கள் பஸ்ஸினை எடுக்க விடாததோடு அங்கிருந்த இ.போ.சபை அலுவலகத்தினை முற்றுகையிட்டனர்.

எனினும் பொலிஸார் சாரதியினை பத்திரமாக பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதோடு பஸ்ஸினையும் கொண்டு சென்றனர்.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த முதியவரே வாயினை மூடிக்கொண்டு இருக்கின்ற போது நீங்கள் ஏன் துள்ளுகிறீர்கள் என அங்கிருந்த பொலிஸார் ஒருவர் இளைஞர்களிடம் கேட்டுள்ளார்.

இவ் முறுகலினால் பஸ் நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரம் பதற்ற நிலை காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. (ந-4)

# டெசோ தீர்மானங்...

பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் டில்லியில் சந்தித்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பித்தனர்.

தி.மு.க. நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க.மக்கள் அவை, மாநிலங்கள் அவை உறுப்பினர்களான எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், செ.காந்தி செல்வன், திருச்சி சிவா, கனிமொழி, தயாநிதி மாறன், டி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.கே.எஸ்.விஜயன் ஆதி சங்கர், இ.ஜி.சுகவனம் எஸ்.ஆர்.ஜெயதுரை, ஹெலன் டேவிற்சன் அப்துல் ரஹ்மான், டி.எம்.செல்வ கணபதி, வசந்தி ஸ்டேன்லி, ச.தங்கவேலு ஆகியோர் பிரதமரை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தனர்.

இதன் போது டெசோ அமைப்பின் சார்பில் நடைபெற்ற ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி கருணாநிதி பிரதமருக்கு எழுதிய கடிதத்தையும்-தீர்மானங்களையும் அவரிடம் கையளித்தனர்.

அவற்றை ஏற்றுக்கொண்ட பிரதமர், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதியளித்தார். அத்தோடு ஏற்கெனவே ஐக்கிய நாடுகள் மனித வுரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது என்பதை நினைவு கூர்ந்த பிரதமர் இந்தத் தீர்மானங்கள் குறித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-8)


## வேலைவாய்ப்பு

**யாழ்.நகரில் இயங்கிவரும் Direct Marketing International Company க்கு மீண்டும் ஓர் தடவை ஆட்சேர்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உலகளாவிய ரீதியில் தன் கிளைகளைப் பரப்பி பெருமைபெறும் Company மீண்டும் ஒருமுறை O/L, A/L கல்வி கற்றவர்களுக்கு 6 மாத கால பயிற்சி நெறியுடன் ஓர் உடனடி நிரந்தர வேலைவாய்ப்பு பெற்றுத் தருகின்றது. நீங்கள் இணைந்து கொள்ள அழைக்க வேண்டிய இல. 0771518168

சம்பள எல்லை ❋ பயிற்சியின்போது 8000/=

❋ பயிற்சி முடிந்த பின் 35000/=

குறிப்பு: ❋ யாழ். நகரை அண்மிக்காதவர்களுக்கு தங்குமிடம் இலவசம் (இருபாலாரும்)

முந்தும் 25 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(262)


# மகிந்தவின் குடும்பத்...

பாளராக மகிந்த ராஜபக்ஷவை நிறுத்த வேண்டும் என்றும் கட்சியின் மூன்று சிரேஷ்ட உறுப்பினர்கள் மட்டுமே வேண்டிக் கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாப்பின் படி எனக்கு அதிக அதிகாரம் இருந்தும் கூட அவற்றினை பயன்படுத்த மகிந்த ராஜபக்ஷ என்னை அனுமதிக்கவில்லையென்றும் குற்றம்சாட்டியுள்ள சந்திரிகா, அதற்காக தான் சண்டையிடவுமில்லை என்று கூறியுள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை தெரிவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது எமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் (61 பேரில் என்னையும் மகிந்தவையும் தவிர்த்து) 59 பேரில் மூவர் மட்டுமே மகிந்தவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்து மாறு கேட்டிருந்தனர்.

ஏனைய அனைவரும் இவரை வேட்பாளராக நிறுத்த வேண்டாம் என்றே கேட்டிருந்தனர் எனவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது சீரழிக்கப்பட்டுள்ளது. மகிந்த குடும்பத்தினாலேயே இந்த சீரழிவு கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ந-11)

# அகாஷி-பீரிஸ்...

ஏற்கெனவே அடைந்த முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளை சமூகத்துடன் மீள் இணைப்பதற்கான நடவடிக்கைகள், கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் ஏறத்தாழ பூர்த்தியடைவதாக அவர் தெரிவித்தார்.

அரசியல் மற்றும் அரசியல் அமைப்பு பிரச்சினைகளை ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி உடனடியாக நாடாளுமன்ற தேர்வுக்குழு நியமிக்க அரசாங்கம் தயார் நிலையில் உள்ளதாக அமைச்சர் பீரிஸ் எடுத்துரைத்தார். மேலும், அகாஷி, நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை நேற்று பிற்பகல் கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பில் இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவர் நொபுஹிடோ ஹோபோ, ஜப்பானுக்கான இலங்கைத்தூதுவர் ரியர் எட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோர் உட்பட ஜப்பானியத் தூதுக்குழுவினரும் பங்குபற்றியிருந்தனர். (ந-11)

# மோ.சைக்கிள் விபத்...

குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் முல்லைத்தீவு பட்டு வாய்க்கால் பாலத்தடியில் இடம் பெற்றுள்ளது.

இதில் செல்வபுரம் முல்லைத்தீவைச் சேர்ந்தவரும் இரு பிள்ளைகளின் தந்தையாருமான செல்லையா-பானுதேவன் (வயது 43) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் தனது வேலையினை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் முன்னால் சென்று கொண்டிருந்த தனியார் போக்குவரத்து பஸ் திடீரென நின்று முன்னால் எதிர் நோக்கி வந்த வாகனத்திற்கு இடம் ஒதுக்கும் போதே இங்கு இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் மாஞ்சோலை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்படும் போது போகும் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் வைத்திய சாலையில் உள்ளதோடு விபத்துவிசாரணைகளினை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

# வடக்கு மக்களின் வாழ்...

நன்டி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களில் பெரும் பகுதியினரை மீளக்குடியமர்த்துவதில் அரசாங்கத்தினதும் மனித நேய சமுதாயத்தினதும் பாரிய சாதனைகளை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், இன்னும் பல தேவைகள் வடக்கு மக்களுக்கு நிறைவேற்றப்படாமல் உள்ளென என அவர் கூறினார்.

நன்கொடைகள் குறைந்து வருகின்றன. எனவே மாற்று வழிகளை தேட வேண்டியுள்ளது. புலமான தலைமைத்துவம், வினை திறன் மிக்க ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள், பொறுப்புக்கூறலை மேம்படுத்தல் என்பவற்றில் நாம் இப்போது கூடிய கவனம் செலுத்துகின்றோம் என அவர் கூறினார்.

நன்கொடை வழங்கும் அமைப்புக்கள் கடந்த 2006-2012 வரையான ஆறு வருடத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இலங்கைக்கான மனிதாபிமான உதவியாக வழங்கியுள்ளன என அவர் தெரிவித்தார். கடந்த 10 வருடங்களில் உலகெங்கும் 800 இற்கு மேற்பட்ட உதவிப் பணியாளர்கள் கடமையின்போது இறந்ததாக அவர் கூறினார்.

2011ஆம் ஆண்டில் மாத்திரம் 301 அனர்த்தங்களில் 30,000 பேர் வரையில் இறந்ததாகவும் 206 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டதாகவும் 366 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான சேதங்கள் ஏற்பட்டதாகவும் நன்டி கூறினார்.

ஐ.நா. பொதுச்சபை ஓகஸ்ட் 19ஆம் திகதியினை உலக மனிதாபிமான தினமாக பிரகடனம் செய்துள்ளது. 2003ஆம் ஆண்டு பாக்தாத் நகரிலிருந்த ஐ.நா. அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய குண்டுத்தாக்குதலில் 22 மனிதாபிமானப் பணியாளர்கள் இறந்ததை நினைவு கூரும் வகையில் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருடத்திற்கான தொனிப்பொருள் நான் இங்கிருந்தேன் என்பதாகும். இது எவ்வளவு சிறிய தொகையினராக இருப்பினும் மக்களுக்கு உதவுவதாகும்.

இந்த நிகழ்வில் இராஜதந்திர சேவையினர் நன்கொடை வழங்கும் அமைப்புகள், சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் சிவில் சமூக உத்தியோகஸ்தர்கள் ஆகியோருடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். (ந-8)

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து இரத்தினம்



ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான சபையின் நிர்வாக உறுப்பினரும் பிரதான உபயகாரருமாகிய தம்பிமுத்து இரத்தினம் நேற்று முன்தினம் 21.08.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து- பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும்,

தயானந்தன்,றமீனா, யசோதா, ஆனந்தரூபன், ரஜீனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நளாஜினி, கமலராஜ், சற்குணராஜ், சோனாலி, சுதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 24.08.2012 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: றமீனா(மகள்)

(கி-811)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] வெளியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org